# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

ஜூலை 2008 ஜீவியம் 14 மலர் 3

*இம்மாத மலரில்....*

பொருளடக்கம்



| | பக்கம் |
|---|---|
| இம்மாதச் செய்தி | 2 |
| ஆன்மீக மற்றும் மனோதத்துவ உண்மைகள் | 3 |
| லைப் டிவைன் | 6 |
| அன்பர் கடிதம் | 16 |
| தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் | 17 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 18 |
| ஆன்மா நிகழ்த்தும் அற்புதம் | 24 |
| சுபசகுனம் | 27 |
| சாவித்ரி | 29 |
| முன்னேற்றம் தரக்கூடிய சாதனை | 31 |
| அஜெண்டா | 36 |
| குடும்பம், நட்பு, உறவு, வேலை, வருமானம், என்றிவற்றை எல்லாம் அன்னை மயமாக்குவதற்கான வழிகள் | 38 |
| மலரும் மணமும் | 48 |
| லைப் டிவைன் - கருத்து | 58 |
| யோக சக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள் | 60 |



❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஜீவியத்தின் ஓசை

நம்மை மற்றவர் உதவி கேட்டு வருவது அருள். அன்னை நமக்கு அருள் வழங்கிய அதே பாணியில் நாமும் மற்றவருக்கு அவ்வருளை உதவியாக வழங்குவது பேரருளாகும்.

அன்னை மற்றும் பகவான் ஸ்ரீ அரவிந்தரைப் பற்றிய எந்தக் கட்டுரையும் அவர்களுடைய சக்தி மற்றும் சூழலைத் தாங்கி வரும்.

## இம்மாதச் செய்தி

**அசைவு ஆரம்பம்.**

**அசரீரி சக்தியின் செயல்.**



# ஆன்மீக மற்றும் மனோதத்துவ உண்மைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

**N. அசோகன்**

241. மனநிலை பாதிப்பு என்பது தீய சக்திகள் நம் பர்சனாலிட்டிக்குள் புகுந்து விடுவதால் வருவதாக அன்னை கூறுகிறார். மருத்துவ சிகிச்சை ஓரளவுக்குத்தான் நிவாரணம் அளிக்கும். தீய சக்தி வெளியேறும் போதுதான் உண்மையான நிவாரணம் கிடைக்கும்.

242. வேலை செய்யாமல் வீணே காலத்தைக் கடத்துபவர்களின் சிந்தனையில் விஷமம் தோன்றும் என்பது மிகவும் உண்மை. வேலை செய்யாமல் வீணே இருப்பவர்களுடைய மனநிலையைத் தீய சக்திகள் எளிதில் கெடுத்து விடுகின்றன.

243. உடல் ஊனமுற்றவர்களைச் சமூகம் நெடுங்காலமாகக் கிண்டல் செய்து வந்தது. ஆனால் அதே சமூகம் இப்பொழுது ஊனமுற்றவர்களுக்குக் கருணை காட்டுகிறது என்பது சமூக நாகரீகம் உயர்ந்து இருப்பதைக் காட்டுகிறது.

244. புத்தி மந்தமான குழந்தைகளைப் பழங்காலத்தில் புறக்கணித்தார்கள். ஆனால் அம்மாதிரியான குழந்தைகளுக்கும் இன்று கல்வி புகட்ட விசேஷ வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இது கல்வித் துறையில் நிகழ்ந்த ஒரு பெரிய புரட்சியாகும்.

245. விளையாட்டில் கெட்டிக்காரர்களாக இருப்பவர்கள் பொதுவாகப் படிப்பில் மந்தமாக இருப்பார்கள். விளையாட்டுத் திறமை என்பது நம்முடைய நரம்பு மற்றும் தசைகளைப் பலப்படுத்துவதால் வருவது. தசைகளைப் பலப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தும்பொழுது, அறிவு பலம் குறைந்து போவதில் ஆச்சர்யமில்லை.

246. அதிரடிப் படை வீரர்கள் செய்யும் சாகசங்கள் மனிதனுடைய உடம்பிற்குள் மறைந்துள்ள அபரிமிதமான உடல் தெம்பிற்கு அடையாளமாக இருக்கின்றன.

247. தீ மிதிப்பவர்கள் காலில் தீப்புண் படுவதில்லை என்பது விஞ்ஞானத்திற்கு

ஒரு புதிராக உள்ளது. தீ மிதி விழா நடக்கும் கோயிலில் உள்ள தெய்வம், அந்தத் தீயின் வெப்பத்தைத் தான் வாங்கிக்கொள்கிறது என்பதால், பக்தர்களுக்குக் காயம் படுவதில்லை என்பது ஆன்மீக விளக்கமாகும்.

248. கிராமவாசிகள் நகரவாசிகளைவிட வலியை அதிகமாகப் பொறுத்துக் கொள்வார்கள். விவசாயத் தொழில் மிகவும் physicalஆக இருப்பதால் நகரவாசிகளைவிடக் கிராமவாசிகள் விழிப்புணர்வு குறைந்தவர்களாக இருக்கிறார்கள். அதனாலேயே அவர்களுக்கு வலி உணர்வும் குறைவாகத் தெரிகிறது. கருத்தளவில் பார்த்தால் அறிவு ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் உடலிலிருந்து தன்னை வேறுபடுத்திப் பார்ப்பவருக்கு வலி குறைவாகத் தெரிய வேண்டும்.

249. பக்தர்கள் தம்முடைய உடம்பை வருத்திக்கொள்வதை நம்மால் பார்க்க முடிவதில்லை. ஆனால் அவர்களுடைய கடவுள் பக்தி அந்த வலியைத் தாங்கிக்கொள்ளும் சக்தியை அவர்களுக்குத் தருகிறது.

250. வலி என்ற உணர்வு நமக்கு விழிப்புணர்வைக் கொடுப்பதற்காக இயற்கை கையாளும் ஓர் அணுகுமுறையாகும். உடம்பில் விழிப்புணர்வு வருவதற்கு வலி வருகிறதென்றால், உணர்வில் விழிப்புணர்வு வருவதற்கு அதே வலி அவமானமாகவும், ஏமாற்றமாகவும் வருகிறது.

251. மேலைநாடுகள் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அறிவைப் பெற்றுள்ளன. இந்தியா போன்ற கீழைநாடுகள் ஆன்மீக அறிவைப் பெற்றுள்ளன. முன்னது ஒரு புறச் சாதனையாகும். பின்னது அகச் சாதனையாகும். இவையிரண்டையும் ஒருங்கிணைத்தோம் என்றால், கீழைநாடுகளுக்குப் பொருளாதார வளமும், மேலைநாடுகளுக்கு ஆன்மீக வளமும் கிடைக்கும்.

252. மேலைநாட்டவர்கள் தங்களுடைய சுத்தம் மற்றும் ஒழுங்குமுறைகளால் ஜடத்திலுள்ள பிரம்மத்தையே வெளிக்கொணர்ந்துவிட்டார்கள். இதற்கு நாம் அவர்களைப் பாராட்ட வேண்டும்.

253. சோவியத் யூனியனில் கம்யூனிஸ்ட்டுகள் ‘கடவுளே இல்லை’ என்றார்கள். ஆனால் கம்யூனிசக் கொள்கைகளான சமத்துவம் மற்றும் கடின உழைப்பு ஆகியவற்றை அவர்கள் கடைப்பிடிக்கும்பொழுது உழைப்பில் அவர்கள் இறைவனைக் காண்கிறார்கள் என்றுதான் ஆகிறது.

254. மேலைநாட்டு விஞ்ஞானிகள் விஞ்ஞான ஆராய்ச்சியில் கடைசி எல்லைக்கு வந்துவிட்டார்கள். ஜடத்தை ஆராய்வதில் அவர்கள் நிபுணர்களாக விளங்கினாலும், ஜடத்தைத் தாண்டிய ஆன்மீக



ஆராய்ச்சியில் நுழைந்தார்கள் என்றால், ஒன்றும் தெரியாத குழந்தைகள் போல் இருப்பார்கள்.

255. இந்தியா போன்ற வளரும் நாடுகள் மேலைநாட்டவருடைய சுறுசுறுப்பு, கடின உழைப்பு மற்றும் வேலைப் பண்புகளைப் பெற்றுக்கொள்வது நல்லது. மேற்கண்டவைகளை வளரும் நாடுகள் ஏற்றுக்கொள்ளும் பொழுது, அவர்களுடைய வளர்ச்சி வேகம் அதிகரிக்கும்.

256. ஐரோப்பாவிலுள்ள கடுமையான குளிர், ஐரோப்பியர்களுடைய உற்பத்தித் திறனை அதிகரித்துக்கொள்ள உதவியது. இந்தியா போன்ற உஷ்ணப் பிரதேசங்களில் இருக்கின்ற தட்பவெப்ப நிலை வருடம் முழுவதும் பயிரிட உதவுவதால் இந்தியர்கள் சோம்பேறிகளாவதற்குக் காரணமாகிவிட்டது.

257. எந்த நாடும் உலக அரங்கில் சில நூற்றாண்டுகளுக்கு மேல் ஆதிக்கம் செலுத்தியதில்லை. தற்போது நிலவுகின்ற அமெரிக்க ஆதிக்கமும் இதற்கு விதிவிலக்கல்ல.

258. அமெரிக்காவில் நிலவிய சுதந்திரமான சூழ்நிலைதான் அந்நாட்டினுடைய பெரிய வலிமையாக இருந்தது. ஆனால் உலக வர்த்தகக் கட்டிடத்தின் மேல் நிகழ்ந்த தாக்குதலுக்குப் பிறகு இந்தச் சுதந்திரச் சூழ்நிலை மிகவும் குறைந்துள்ளது. ஆனால் நீண்ட காலக் கண்ணோட்டத்தில் பார்த்தால், மீண்டும் பழைய சுதந்திரச் சூழ்நிலைக்கே திரும்பி வருவதே நல்லது.

259. அமெரிக்கா, ஜப்பானிய நகரங்கள் இரண்டின் மேல் அணுகுண்டு வீசி பயங்கர சேதத்தை விளைவித்தது. ஆனால் அதற்குப் பிறகு அமெரிக்காதான் ஜப்பானிய ஏற்றுமதிகளுக்குப் பெரிய வாயிலாக உள்ளது. தான் விளைவித்த ராணுவ சேதத்திற்குப் பரிகாரம் செய்வது போலப் பொருளாதாரச் சன்மானங்களை வழங்குவதுதான் அமெரிக்கா செய்கின்ற கர்ம பரிகாரம் என்று எடுத்துக்கொள்ளலாம்.

260. தற்போது அமெரிக்காவில் நிலவும் நுகர்பொருள் கலாச்சாரம் அமெரிக்கர்களுக்கு வசதியான ஒரு வாழ்க்கையை வழங்கலாம். ஆனால் அமெரிக்க இளைஞர்கள் இந்திய ஆன்மீகத்தை நாடி வருவதைப் பார்த்தால், நுகர்பொருள் கலாச்சாரத்தில் எதிர்பார்த்த முழுச் சந்தோஷம் கிடைக்கவில்லை என்று தெரிகிறது.

தொடரும்.....

❀ ❀ ❀

# லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XVII. The Divine Soul

Sachchidananda has two terms of existence. Page No.152
A divine soul would live simultaneously Para No.5
in the two terms.
They are two inseparable poles.
The Absolute unfolds itself in those two poles.
We call them the One and the Many.
All being does really so live.
Ours is a divided self-awareness.
To it this is incompatible.
There is a gulf between the two.
It drives us towards a choice.
On one side is the multiplicity.
It is exiled from the direct and entire consciousness of the One.
Another is the unity.
To it the consciousness of the Many is repellent.
This is a divorce and duality.
The divine soul would not be enslaved to them.
It would be aware in itself of the reality.



## 17. தெய்வீக ஆன்மா

சச்சிதானந்தத்திற்கு இரு வாழ்வு நிலைகள் உண்டு.
தெய்வீக ஆன்மா ஒரே சமயத்தில் இரண்டிலும் இருக்கும்.

அவை பிரிக்க முடியாத இரு துருவங்கள்.
பிரம்மம் அத்துருவங்களிலும் தன்னை வெளிப்படுத்தி மலர்கிறது.
நாம் அதைப் பரமாத்மா, ஜீவாத்மா என்கிறோம்.
எல்லா ஜீவன்களும் உண்மையில் அப்படியே வாழ்கின்றன.
நம் வாழ்வு பகுதிகளாகப் பிரிந்த சுயானுபவம்.
அதற்கு இது ஒத்து வாராது.
இவற்றிடையே கடல் போன்ற பெருவெளியுண்டு.
அதனால் நாம் ஒன்றை ஏற்க வேண்டும்.
ஒரு பக்கம் ஆயிரக்கணக்கான ஜீவன்கள் உள்ளன.
நேரடியாக, முழுமையாகப் பரமாத்மாவை அறியும் நிலை அதற்கில்லை.
அடுத்தது ஐக்கியம்.
ஐக்கியம் பகுக்கப்பட்ட நிலையை வெறுக்கும்.
இது இரட்டை நிலை, உள்ளதினின்று பிரிந்த நிலை.
தெய்வீக ஆன்மா இதற்கடிமையாகாது.
சத்தியத்தை அது தன்னில் காணும்.

The reality is at once two opposite things.
There is the infinite self-concentration.
On the other side, there is the infinite self-extension and diffusion.
The divine soul is aware of both at once.
The One is in the unitarian consciousness.
The One is also in the extended consciousness.
The One holds the innumerable multiplicity in itself as if potential, unexpressed.
Therefore it is non-existent to our mental experience.

In the other the multiplicity is thrown out.
It is active as the play of its own conscious being, will and delight.
There is one more pair of statuses.
The Many ever draw down to themselves the One.

The One is the source and reality of their existence eternally.

The Many ever mount up attracted to the One.

The One is the eternal culmination and blissful justification of all the play of difference.
This vast view of things is the mould of the Truth consciousness.
It is the foundation of the large Truth and Right hymned by the Vedic seers.
This unity of all these terms of opposition is the real Adwaita.
The Adwaita is the Supreme comprehending word of the knowledge of the Unknowable.



சத்தியம் ஒரே சமயத்தில் இரு எதிரான உண்மைகளாகும்.
அனந்தம் தன்னுள் தானே நிறைந்துள்ளது.
மறுபுறம் தான் வெளிப்பட்டு, முடிவின்றிப் பரவியுள்ளது.

தெய்வீக ஆன்மா இரண்டையும் ஒரே சமயத்தில் அறியும்.
பரமாத்மா ஐக்கியத்தில் உள்ளது.
பரமாத்மா உலகிலும் பரவியுள்ளது.
ஏராளமான ஜீவன்களைப் பரமாத்மா தன்னுள் வெளிப்படுத்தாமல் வித்தாகப் பெற்றுள்ளது.
அதனால் நமக்கு – நம் மனத்தின் அனுபவத்திற்கு – அது இல்லை எனத் தோன்றுகிறது.
மற்றதில் ஜீவாத்மாக்கள் வெளிப்படுகின்றன.
தன் ஜீவன், உறுதி, ஆனந்தம் லீலையாகப் பரவுகிறது.

மேலும் ஒரு இரட்டை நிலையுண்டு.
ஜீவாத்மாக்கள் எப்பொழுதும் பரமாத்மாவைத் தங்களை நோக்கி இழுக்கின்றன.
பரமாத்மா அவர்களது சத்தியம்; அதுவே அவர்களுடைய நிலையான வாழ்வு.
ஜீவாத்மாக்கள் எப்பொழுதும் பரமாத்மாவை நோக்கி ஆர்வமாக எழுகின்றன.
ஜீவாத்ம லீலைக்கு முடிவு பரமாத்ம பிரம்மம்.

இப்பரந்த நோக்கம் சத்தியஜீவிய அச்சு வார்ப்பு.
வேதரிஷிகள் பாடிய பெருநெறியின் அடிப்படை அது.

எல்லா நிலைகளின் இவ்வொற்றுமையே உண்மையான அத்துவைதம்.
அறிய முடியாத பிரம்மத்தை அறியும் அறிவுக்கு அத்துவைதம் என்ற சொல் சிகரமானது.

The being, consciousness, will and delight are the outflowing, the extension, the diffusion of Unity.

Page No.153
Para No.6

It is a self-concentrated Unity developing itself not into difference and division, but into another extended form of oneness.

The divine soul will be aware of such variation.

It will itself be concentrated in oneness.

It is so in the essence of its being.

It has always manifested in variation in the extension of its being.

All that takes form in itself will be the manifested potentialities of the One.

The One is the Word or Name vibrating out of the nameless Silence.

It is the Form realising the formless Essence.

It is the active Will or Power proceeding out of the tranquil Force.

It is the ray of self-cognition gleaming out from the sum of timeless self-awareness.

It is the wave of becoming rising up into shape of self-conscious existence.

It is out of the eternally self-conscious Being.

It is joy and love welling for ever out of the eternal, still Delight.

It will be the Absolute biune in its self-unfolding.

Each relativity in it will be absolute to itself because aware of itself as the Absolute manifested.



ஜீவன், ஜீவியம், உறுதி, ஆனந்தம் ஆகியவை ஐக்கியம் பிரிந்து, பரவி, நீட்டித்து, வெளியே மலர்வதாகும்.

இது சுயமான, செறிவான ஐக்கியம். இது பகுதிகளாகவும், வேறுபாடுள்ளதாகவும் மாறும்பொழுது ஒருமை, பன்மையில் வெளிப்படும்.

தெய்வீக ஆன்மாவுக்கு அப்படிப்பட்ட மாறுபாடுகள் தெரியும்.

அது ஒருமையில் செறிவாக இருக்கும்.

அதன் ஜீவனின் சாரத்துள் அப்படியிருக்கும்.

தன்னை வெளிப்படுத்தும்பொழுது இம்மாறுதல்கள் மூலமாகவே வெளிப்படுத்துகிறது.

அதனுள் உருவாகும் அத்தனையும் பரமாத்மாவில் இருந்த வித்துக்களே வெளிப்படுகின்றன.

பரமாத்மாவே பீஜாட்சரம்; மௌனத்தினின்று எழுந்த நாமம்.

அரூபியின் சாரத்திலெழுந்த ரூபம் அது.

சலனமற்ற அமைதியினின்று உருவான செயல் உறுதி, சக்தி.

காலத்தைக் கடந்த சுயானுபவத்தில் எழுந்த சுய ஞானம்.

தன்னையறியும் வாழ்விலிருந்து எழுந்த உருவம், அலை.

அனாதிகாலத்து ஜீவன் தன்னையறிவதால் அவை புறப்படுகின்றன.

காலம் கடந்த, நிலையான அனந்தத்திலிருந்து சந்தோஷமும், அன்பும் ஊற்றெழுவது.

பிரம்மம் தன் சிருஷ்டியின் வெளிப்பாட்டில் மலரும்பொழுது இரு நிலைகளை உட்கொண்ட ஒரு நிலையை ஏற்பது.

சிருஷ்டி தன்னைப் பிரம்மமாக அறியும். பிரம்மம் சிருஷ்டியில் தன்னையறிவதால், அதனால் உணர முடிகிறது.

But it will be without that ignorance which excludes other relativities.
To it they are alien to its being or less complete than itself.

There are three grades in the extension. Page No.154
They are grades of the supramental existence. Para No.7
The divine soul will be aware of them.
They are really not grades.
They are a triune fact of self-manifestation of Sachchidananda.

It will be able to embrace them.
It will do so in one and the same comprehensive self-realisation.
(A vast comprehensiveness is the foundation of the truth-conscious Supermind).
It will be able to conceive, perceive, sense divinely all things as the Self.
It is its own self, one self of all, one Self-being, and Self-becoming.
But not divided in its becoming which has no existence apart from its own self-consciousness.
It will be able divinely to conceive, perceive, and sense all existence as soul-forms of the One.
It has its own being in the One.
It has its own standpoint in the One.
It has its own relationship with all the other existences.
They people the infinite unity.
But all are dependent on the One.
It is the conscious form of Him in His own infinity.
It will be able divinely to conceive, perceive and sense all these existences in their individuality.



சிருஷ்டி மற்ற அம்சங்களை வேறாகக் கருதும் அஞ்ஞானம் பெற்றிருக்காது.

அதன் ஜீவனுக்கு அது புறம்பானது. தன் முழுமைக்குக் குந்தகமானது.

நீட்சி எனும் வெளிப்பாட்டில் மூன்று அடுத்தடுத்த கட்டங்கள் உள்ளன.
அவை சத்தியஜீவியக் கட்டங்கள்.
தெய்வீக ஆன்மா அவற்றையறியும்.
அவை பிரிந்து நிற்கும் பிரிவினையல்ல.
அவை சச்சிதானந்தத்தின் சுய வெளிப்பாட்டில் மூன்று நிலைகள் ஒன்றாய் இருப்பதாகும்.
தெய்வீக ஆன்மா அவற்றைத் தழுவும்.
ஒரே முழுமையான சுய-சித்தியில் அதைச் செய்யும்.
(சத்தியம்-ஜீவியமான சத்தியஜீவியத்தின் பரந்த ஞான அடிப்படை அது).
தெய்வீக ஆன்மா தெய்வமாகச் சிந்தித்து, உணர்ந்து, அனைத்தையும் பிரம்மமாக அறியும்.
தன் சொந்த ஆத்மாவாக, எல்லா ஜீவனிலிருக்கும் பிரம்மமாக, ஒரே பிரம்ம புருஷனும், ஒரே பிரம்ம பிரகிருதியுமாக அனைத்தையும் அறியும்.
அவை சிருஷ்டியில் பிரிந்தவையல்ல. தன் சொந்த ஜீவியத்தைக் கடந்து அதற்கு வாழ்வில்லை.
பரமாத்மாவின் எல்லா ஆத்மரூபங்களையும் அதனால் கருத்திலும், உள்ளத்திலும், உணர்விலும் கொண்டு வந்து, அனைத்தும் ஒன்று என அறிய முடியும்.
தெய்வீக ஆத்மாவிற்குப் பரமாத்மாவில் சொந்த ஜீவன் உண்டு.
பரமாத்மாவில் அதற்குரிய கருத்துண்டு.
எல்லா ஜீவராசிகளுடன் அதற்கென சொந்த உறவுண்டு.
அவை அனந்தமான ஐக்கியத்துள் வசிக்கின்றன.
அனைத்தும் பரமாத்மாவை நம்பியவை.
இறைவனின் அனந்தத்தில் தெய்வீக ஆன்மா தன்னையறியும் ரூபம்.
எல்லா ஜீவராசிகளின் தனித்தன்மையாய் தெய்வீக ஆன்மா கருத்து, உள்ளம், உணர்வால் தெய்வீகமாகக் கருத முடியும்.

That individuality is their separate standpoint living as the individual Divine.
Each lives with the One and Supreme dwelling in it.

Each therefore is not altogether a form or eidolon.
It is not an illusory part of a real whole.
It is not a mere foaming wave on the surface of an immobile Ocean.
(These are after all inadequate mental images).
They are a whole in the whole.
It is a truth that repeats the infinite Truth.
It is a wave that is all the sea.
It is a relative that proves to be the Absolute itself.
It is seen when we look behind form and see it in its completeness.

*Contd....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

உன் குழந்தை மீது பிரியம் கொள்ளுதல் தெய்வீக உணர்வு. அவர்களுடைய நல்ல குணங்களைத் தெரிந்துகொள்ளுதல் தன்னை அறிவதாகும். அவர்களுடைய குறைகளைத் தெரிந்துகொள்ளுதல் தன்னை உயர்ந்த முறையில் அறிவது ஆகும்.

***நம்மை நமக்கு உணர்த்தும் பிள்ளைகள்.***



ஜீவாத்மாவின் தனிப்பட்ட நோக்கம் அதன் தனித்தன்மை.

அனைத்தும் பரமாத்மாவுடன் வாழ்கின்றன. சத்புருஷன் அவற்றுள் உறைகிறது.
எனவே ஒவ்வொன்றும் ஒரு ரூபமில்லை; ஒரு ரூபமான மாயையில்லை.
அது சத்திய முழுமையின் மாயையான பகுதியில்லை.
ஆழ்ந்து, அமைதியான கடலின் நுரைக்கும் அலையல்ல.

(இவை மனம் எழுப்பும் ரூபங்கள்).
அவை முழுமையுள் முழுமை.
அனந்த சத்தியத்தைத் தாங்கி எழும் சத்தியம்.
கடலை முழுமையாகக் கொண்ட கடலலையது.
பிரம்மமான சிருஷ்டியது.
ரூபத்தின் பின்னால் அது முழுமையைத் தேடும்பொழுது அது நமக்குப் புலப்படும்.

**தொடரும்.....**

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தனிமனிதனுடைய திறமைகள் சமூகத்தின் திறமைகளுடன் இணைந்திழையும்பொழுது பண்புகள் செயல்பட்டுக் காரியம் பூர்த்தியாகிறது. தனிமனிதனுடைய பண்புகள், சமூகத்தின் பண்புகளுடன் இணையும் இடம் எல்லாம் (reversal) ஜீவியம் புரட்சிகரமான மாறுதலையடைகிறது.

***பண்பின் செயல்திறன் மனிதனையும்,***
***சமூகத்தையும் ஒத்துழைக்க உதவும்.***

## அன்பர் கடிதம்

*ஓம் மதர் ஸ்ரீ அன்னை!*
*ஓம் நமோ பகவதே ஸ்ரீ அரவிந்தாய!*
*ஓம் ஆனந்தமயி சைதன்யமயி சத்தியமயி பரமே!*

எனது மகள் கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கிறாள். தொடர்ந்து தியான மையப் பிரார்த்தனையில் கலந்துகொள்ள வருகிறாள். அதுவும் தற்சமயம் பரீட்சை நடந்துகொண்டிருப்பதால் தவறாமல் தியான மையத்திற்கு வர வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருக்கும் நேரத்தில், நானும் எனது மகளும் புடவை எடுப்பதற்காகப் புரசைவாக்கம் சென்றிருந்தோம். புடவைக்குப் பணம் settle செய்துவிட்டு, தியான மையத்திற்கு நேரமாகிவிட்டதால் அவசரமாக ஆட்டோ பிடித்துப் பெரம்பூர் அருகே வந்துகொண்டு இருந்தோம். பெரம்பூர் அருகே வந்தவுடன்தான் புடவையைக் கடையில் மறந்து வைத்துவிட்டு வந்தது ஞாபகம் வந்தது. உடனே மீண்டும் பஸ்ஸில் கடைக்குச் சென்றோம். மறந்த புடவை அங்கே கடையில் இருக்க வேண்டும் என்ற டென்ஷன் இருந்தது. எங்களைப் பார்த்த உடனே கடைக்காரர் புடவையைக் கையில் கொடுத்துவிட்டார். சரியாகத் தியானம் ஆரம்பிப்பதற்குள் வந்துவிட்டோம். அன்னை எங்களுக்குப் புடவையையும் கொடுத்தார். தியான நேரத்திற்குச் சரியாக வரும்படியும் அமைத்துக் கொடுத்தார். இதன் மூலம் “அன்னை காலத்தைக் கடந்தவர்” என்று புரிந்துகொண்டோம். ஏனெனில் இவ்வளவும் ½ மணி நேரத்தில் முடிந்துவிட்டது. அன்னைக்கு நன்றியைத் தெரிவித்து விட்டோம்.

❀❀❀



## தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

(சென்ற இதழின் தொடர்ச்சி....)

கர்மயோகி

36. கல் தேயும், தேயாது சொல்.

✡ **ஞாபகம் பொய்க்கும்; சமர்ப்பணமான செயலை மனதால் மறக்க முடியாது.**

37. பிறருக்கு முற்பகலில் கேடு செய்தால்,

பிற்பகலில் தனக்குக் கேடு வரும்.

✡ **திருவுருமாற்றம் முற்பகல் கேட்டை, பிற்பகல் நன்மையாக்கும்.**

38. ஈனுமோ வாழை இரு கால் குலை.

✡ **கருமியும் அன்பரிடம் தாராளமாக நடந்துகொள்வான்.**

39. புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.

✡ **தேவை பெரியதாயினும் கறுப்புப் பணம் சேவைக்குதவாது.**

40. கொல்லன் பட்டறையில் ஈக்கு என்ன வேலை?

✡ **அன்பருக்கு உதவும் ஆத்மா உலகிலுண்டோ?**

**அன்பரல்லாதவரால் அன்பருக்கு உதவ முடியாது.**

தொடரும்....

❀❀❀

# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**919) எதிர்கால இலட்சியங்களை - சொத்துரிமையை அழிப்பது, பெண் விடுதலை - மனம் ஏற்றுக்கொண்டாலும் உடல், உணர்வு எதிர்த்துப் புரட்சி செய்யும்.**

*மனம் ஏற்ற இலட்சியங்களை உணர்வு எதிர்த்துப் புரட்சி செய்யும்.*

✡ 1942இல் போர் நடந்தது. வங்காளத்தில் பஞ்சம். 30 இலட்சம் பேர் இறந்தனர். தமிழ்நாட்டில் அரிசிப் பற்றாக்குறை. அரிசிக்குப் பதிலாக ரேஷன் கடையில் கோதுமை கொடுத்தனர். ஹோட்டலில் சாப்பிடப் போனால், முதலில் கோதுமைப் பண்டமான பூரியைக் கொடுத்து, பிறகு அரிசி அளவோடு தருவான். அந்த நாளில் ஹாஸ்டலில் இட்லி போடும் அன்று, மற்ற மாணவர்கள் இட்லி போடும் செக்ஷனுக்கு ஏராளமாக வந்து சாப்பிடுவார்கள்.

❀ பழக்கமான சாப்பாடு ருசி மிகுந்தது.

✡ 30 வருஷத்திற்கு முன் ஒரு பெண் சுப்ரீம் கோர்ட்டில் சாட்சி சொல்ல வந்தவள், பேண்ட் போட்டுக்கொண்டு வந்தாள். ஜட்ஜ் அவளை "போய்ப் புடவை கட்டிக்கொண்டு வா" எனத் திருப்பி அனுப்பிவிட்டார்.

❀ பார்த்துப் பழகிய புடவை பவித்திரமான ஆடை.

✡ 1915ஆம் ஆண்டு ஆறாஅமுதன் என்ற ஐயங்கார் சிறுவன் ஸ்ரீ அரவிந்தரை நாடி வந்தான். ஏழைப் பையன் என்பதால் அவனால் கல்லூரிப் படிப்பைத் தொடர முடியவில்லை. பகவான் அவனை சென்னைக்கு அனுப்பி, B.A. படிக்க வைத்தார். பகவானுடனிருந்த பலரும் கல்கத்தாவிலிருந்து வந்தவர்கள். அப்பொழுது 1911 வரை கல்கத்தா இந்தியாவின் தலைநகராக இருந்ததால், ஆங்கில மோகம் அதிகமான இடம். அவர்கள் அனைவரும் கிராப் வெட்டிக் கொண்டவர்கள். ஆறாஅமுதன் குடுமி வைத்திருந்தான். ஆறாஅமுதன் என்ற பெயரை பகவானுக்கு உச்சரிக்க முடியவில்லை



என்பதால், அமிர்தா என அவர் பையனை அழைப்பார். பையன் ஆசாரமான குடும்பத்தைச் சார்ந்தவன். பூணூலும், குடுமியும் ஆசாரச் சின்னங்கள். 1920இல் காங்கிரஸ் தலைவர் சத்தியமூர்த்தி தொண்டர்களுடன் போட்டோ எடுத்துக்கொண்டார். எவரும் ஷர்ட் போடவில்லை. அனைவரும் குடுமி வைத்திருந்தனர். காலம் வேறு. அமிர்தாவின் குடுமி கேலிக்குரியது ஆயிற்று. அவர் செய்வதற்கு ஒன்றுமில்லை. பூணூல், குடுமி எல்லாம் சுவாமி விக்ரகம் போல் கருதப்பட்ட காலம். ஒரு நாள் அமிர்தா தூங்கிக் கொண்டிருந்த பொழுது அவர் நண்பர்கள் குடுமியை வெட்டிவிட்டனர்; பூணூலை உருவினர். அந்தக் கோலத்துடன் அமிர்தா வீடு சென்றார்.

வீட்டினர் அனைவரும் துக்க செய்தி வந்ததாக 'ஓ' என அழுது ஓலமிட்டனர்.

'கட்டுக்குடுமியுடன் ராஜா போல் இலட்சணமாக இருந்தான் பிள்ளை. கிராப்புத் தலையுடன் குரங்கு மாதிரி வந்து நிற்கிறான்' என்றனர்.

இன்று யார் குடுமி வைத்துக்கொள்ள முடியும்?

✡ வரும் காலத்தில் சொத்துரிமை இருக்காது, திருமணம் இருக்காது. இரண்டாவது பழக்கம் மேல்நாட்டில் வந்துவிட்டது. என்றாலும் இவற்றை ஏற்க முடியாது. 'நான் சம்பாதித்த பணத்தை என் பிள்ளை அனுபவிக்காமல் யார் அனுபவிப்பது?' என மனம் கேட்கும். அறிவு ஏற்றுக்கொள்ளாது. ஏற்றுக்கொண்டாலும்,

❀ உணர்வு புரட்சி செய்யும்.

'என் காதில் போடாதே, நாராசமாக இருக்கிறது' என்று கூறும்.

❀ மனம் ஏற்காத விஷயங்களைக் கையால் தொடக் கூசும்.

சொல்லாகப் பேச வாயெழாது.

❀❀❀

**920) ஜீவியம் மாறித் தயக்கம் மறைந்தாலும் உடலுணர்வின் எதிர்ப்பு சமூகச் சூழ்நிலை மாறும்வரை இருக்கும். அது போன்ற தயக்கத்தைவிட மனிதன் சில சமயங்களில் தன் இலட்சியங்களை அளவுகடந்து (over doing) பின்பற்றுகிறான்.**

*தயக்கத்தைத் தவிர்க்க அதை அதிகமாகப் பின்பற்றுகிறான்.*

✡ நன்கொடை வசூல் செய்யும்பொழுது பலர் பணம் தருவார்கள். மற்றவர் பிறகு தருவதாக ஒரு தொகையைக் குறிப்பிடுவார்கள். யார் ஒரு ரூபாய்கூடக் கொடுக்கப் போவதில்லையோ, அவர் அதிகபட்சத் தொகையைக் குறிப்பிட்டிருப்பார்.

✡ பொதுவாகக் கல்யாண வரிசைகளில், அதிகத் தொகை, வசதி குறைவானவரிடமிருந்து வரும்.

✡ ஒரு ஸ்தாபனத்திற்குப் புதியதாக வந்தவர், வந்தவுடன் திருமணம் செய்து கொண்டார். இரண்டாண்டில் அவருக்குக் குழந்தை பிறந்தது. செய்தி மாமியார் வீட்டிலிருந்து தந்தி மூலம் வந்தது. உடனே அவர் லீவு போட்டுவிட்டுக் குழந்தையைப் பார்க்கப் போனார். அவர் போய்ச் சேருவதற்குள் அவர் ஸ்தாபனத்திலிருந்து ஒருவர் வாழ்த்துத் தெரிவித்துத் தந்தி அனுப்பியிருந்தார். பொதுவாகக் குழந்தை பிறந்த செய்தி தெரிந்தால், நண்பர்கள் பார்த்தபொழுது வாழ்த்துவார்கள். நெருங்கியவர் வீட்டிற்கு வந்து வாழ்த்துத் தெரிவிப்பார்கள். 50 ஆண்டுகட்கு முன் நம் ஊரில் தந்தி மூலம் வாழ்த்து அனுப்புவது இல்லை. ஸ்தாபனத்திலிருந்து எவரும் கடிதம் மூலமும் வாழ்த்துத் தெரிவிக்கவில்லை. நேரில் பார்த்தபொழுது வாழ்த்தினர். தந்தி அனுப்பியவருக்குப் பிள்ளையில்லை.

✡ பதவி, வசதி, படிப்பு குறைவானவர் உடைக்கு அதிக கவனம் செலுத்துவார்கள்.

✡ பேச்சாளர் குரல் அவர் அறிவைப் பிரதிபலிக்கும். விபரம் தெரிந்தவர் சாதாரணக் குரலில் பேசுவார்கள். விவரம் தெரியாதவர் உரத்த குரலில் பேசுவார்கள்.

✡ பழைய, பெரிய கம்பனி போர்ட் சிறியதாகவும், புதிய, சிறிய கம்பனி போர்ட் பெரியதாகவுமிருக்கும்.

✡ அமெரிக்காவில் விலையுயர்ந்த பெரிய கார்களை அதிகமாக வாங்குவது வருமானம் குறைந்தவர்கள், நீக்ரோக்கள்.

✡ அகம் தயங்கிச் சுருங்கினால், புறம் மலர்ந்து விரியும்.

❀ வாழ்வில் முன்னேற்றம் வர அகம் நிறைந்து புறத்தில் வெளிப்பட வேண்டும்.



❀ அகம் அரைகுறையாக இருக்கும்பொழுது புறத்தில் மனம் பலனை எதிர்பார்க்கும்.

அகம் நிறைய முடியாத நிலையில், புறம் வெட்கப்படும்.

அகம் காலியாக இருந்தால், புறம் பதைபதைக்கும்.

அகம் புறத்திற்கு எதிரான பாதையில் போனால், புறம் காலியாக இருக்கும்.

❀ அகம் தானே நிறைந்து, பொங்கி, புறத்தில் வழியும்வரை மனம் நிதானமாக இருக்காது. அந்நிலைகளில் மனித சுபாவம் செயல்படும் வகைகளில் மேற்சொன்னதும் ஒன்று.

❀ ❀ ❀

**921) அதிகமாகப் பின்பற்றுவதும், உடலின் எதிர்ப்பும் - ராகு காலம், சிறு வயது திருமணத்தை அழிப்பது - எதிர்பாராத, அசம்பாவிதமான விளைவுகளை ஏற்படுத்தும். இந்த விஷயத்தைப் பொருத்தவரை உள்ளுணர்வு உடல் அளவில் திருவுருமாற்றம் அடையும் வரை அவை இருக்கும்.**

*எதிர்ப்பு எதிர்பாராத விளைவைத் தரும்.*

✡ மன மாற்றம், செயல் மாற்றம் என்பவை இயல்பாக இருப்பது நன்று.

இராகு காலத்தைப் பரம்பரையாய்ப் பின்பற்றிய குடும்பப் பையன், கல்லூரிப் படிப்பில் இது மூடநம்பிக்கை எனப் புரிந்து, அதைக் கைவிட முன்வரலாம். அவன் கைவிடும் பழக்கத்தை அவன் மனம் கைவிடாது; உணர்வு கைவிடாது; உணர்விற்குக் கீழேயுள்ள உடல் கைவிடாது. அந்த நிலையில் பழக்கத்தை மட்டும் மாற்றினால், ராகு காலம் அதன் வேலையைச் செய்யும். அப்படி ஒருவர் வேலையில் சேரும்பொழுது இராகு காலத்தில் வேண்டுமென்றே வேலையை ஏற்றுக்கொண்டார். ஓராண்டில் இறந்து போனார்.

இந்த அசம்பாவிதம் இன்றி மாற்றம் வர,

❀ அறிவு ஏற்றுக்கொண்டதை உணர்வு ஏற்றுக்கொள்ளும்வரை

பொறுத்திருக்க வேண்டும்.

❀ "எனக்கு இராகு காலத்தில் நம்பிக்கையில்லை" என்பவர் உடனே தன் பழக்கத்தை மாற்றாமல், தன் காரியங்களைக் கவனிக்க வேண்டும். இயல்பாக இனி வரும் வேலைகள் இராகு காலத்தில் வராவிட்டால், அறிவு ஏற்றதை உணர்வும் ஏற்றுக்கொண்டதாக அர்த்தம். அப்படியில்லாமல், இந்த முடிவுக்குப் பின் முக்கியமான விஷயங்கள் இராகு காலத்திலேயே அமைந்தால், உணர்வு அறிவை ஏற்கவில்லை எனப் பொருள். உணர்வு ஏற்கும்வரை காத்திருக்க வேண்டும். அல்லது கடந்த நாட்களில் அவர் செய்த முக்கிய வேலைகள் இராகு காலத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தால், அவை எப்படி முடிந்தன எனப் பார்க்க வேண்டும். பலன் இராகு காலத்தால் பாதிக்கப்படவில்லை எனில், அவருக்கு உண்மையிலேயே இராகு காலத்தில் நம்பிக்கையில்லை எனப் பொருள். அவர் இராகு காலத்தைக் கைவிட்டால், அதனால் பாதிக்கப்படமாட்டார். மேலும் அதை உறுதி செய்ய அவர் கண்ணில், மனதில் படும் முக்கிய நிகழ்ச்சிகள் எப்படி எனக் கவனிக்கலாம். அவை இராகு காலத்தில் அமைந்தால், மேலும் சற்றுப் பொறுக்க வேண்டும் எனப் பொருள். உணர்வு ஏற்றுக்கொண்டாலும், சூழல் ஏற்றுக்கொள்ளவில்லை எனப் பொருள்.

❀ மனித சுபாவம் ஆழமானது; எளிதில் மாறாது. மாமிசம் சாப்பிடும் குடும்பத்தில் மாமிசம் சாப்பிடப் பிரியப்படாதவர் ஒருவர். வீட்டில் அவரை யாரும் மாமிசம் சாப்பிடக் கட்டாயப்படுத்தமாட்டார்கள். மாமிசம் சாப்பிடும் உறவினர்கள், நண்பர்கள் வந்தால், அவர்களுடன் சாப்பிடும்பொழுது இவரும் மாமிசம் சாப்பிடுவார். அதன் ருசி அவருக்குப் பிடிக்கும். அதனால் பிரச்சினையில்லை. சாப்பிட்டு 1 மணி நேரம் கழித்து வயிற்றைப் புரட்டும்.

**வாய்க்கு ஒத்துவரும் உணவு வயிற்றுக்கு ஒத்து வருவதில்லை. ஏதோ ஒன்று அவருள்ளே மாமிசத்தை எதிர்க்கிறது.**

இது மனித சுபாவத்தில் உடல் செயல்படும் வகை.

❀ நண்பனிடம் வாங்கிய புத்தகத்தைத் திருப்பித் தர மறந்துவிட்டார் ஒருவர். வாங்கியதே நினைவு வரவில்லை. நண்பர் புத்தகத்தைக் கேட்டபொழுது கோபம் வந்தது. கோபமாகப் பேசினார். வீட்டிற்குப் போனபின் புத்தகத்தைப் பார்த்து, நண்பனிடம் மன்னிப்புக் கேட்டு, திரும்பக் கொடுத்துவிட்டார். சில வருஷம் கழித்து அந்த நிகழ்ச்சி நினைவு வந்தபொழுது 'என்னிடம் புத்தகம் கொடுக்காமலேயே அவன் பேசுகிறான்' என்று அந்நிகழ்ச்சி மனதில் எழுகிறது. மனிதன் தன் தவற்றை ஏற்கமாட்டான்.



❀ மாற வேண்டுமெனில் மனம் புரிந்து, தெளிந்து ஏற்கும் வரை பொறுத்திருந்து, உணர்வும், சூழலும் ஏற்றபின் மாறுவது நல்லது. சமர்ப்பணம் உண்மையானால், இவ்வளவையும் சேர்த்துச் சமர்ப்பணம் செய்வது, தவறான பின்விளைவை அகற்றும்.

தொடரும்.....

❀ ❀ ❀

## ஜீவிய மணி

**அன்பை அன்பிற்குரியவர் பெற முடியும்.**

## ஸ்ரீ அரவிந்த சுடர்

கீழே வரும்பொழுது ஆசை, மேலே போகும்பொழுது அன்பாகும்.

கீழே வரும்பொழுது ஆனந்தம், மேலே எழும்பொழுது சிருஷ்டியின் ஆனந்தமாகும்.

கீழே வரும்பொழுது ஜீவியமாக இருப்பது, மேலே போகும் பொழுது சித்-சக்தியாகிறது.

சத்தியமாக (நிலைத்த சத்தியம்) கீழே வருவது, மேலே போகும் பொழுது (active truth of ordered being) முறையான ஜீவனின் பரிணாம சக்தியாகும்.

# ஆன்மா நிகழ்த்தும் அற்புதம்

**N.** அசோகன்

ஆண்டுக்கு ரூ.58 லட்சம் விற்பனை கொண்ட ஒரு கம்பெனியின் முதலாளி அவ்விற்பனையை மேலும் உயர்த்துவதற்குக் கடின முயற்சிகள் எடுத்துக்கொண்டிருந்தார். அவர் திறமைசாலி, மற்றும் உழைப்பாளியும்கூட. விற்பனையை அதிகரிக்க எந்த முறை உதவினாலும் அதைப் பின்பற்றத் தயாராக இருந்தார். அவருக்குத் தெரிந்தவர் ஒருவர் உள்ளுறையும் ஆன்மாவைச் செயல்பட வைத்தால், அது விற்பனை உயர்வு என்ற அற்புதத்தை நிகழ்த்தும் என்று தெரிவித்தார். அத்தகைய அணுகுமுறையை அவர் அதுவரையில் கேள்விப்பட்டிருக்கவில்லை. இருந்தாலும் ஆன்மாவை எப்படி அழைப்பது என்று தெரிந்தால், அதையும் முயற்சி செய்து பார்ப்பதாகச் சொன்னார்.

ஆன்மாவை அழைப்பதில் முக்கிய அம்சம் என்னவென்றால் திட்டமிடும் நம் அறிவு மற்றும் உழைக்கும் நம்முடைய உடல் இவற்றை விட உள்ளுறையும் நம் ஆன்மா அதிகமாகச் சாதிக்கும் என்று திடமாக நம்ப வேண்டும். இவ்வணுகுமுறையை மேற்கொள்பவர்கள் ஒரு வியாபார ஸ்தாபனத்தின் எல்லாப் பிரிவுகட்கும் பொருந்தும் வகையில் சீர்திருத்தத் திட்டங்கள் தீட்டினார்கள். இத்திட்டங்களை மேற்கண்ட நிறுவனத்தின் உரிமையாளரிடம் விவரமாகச் சொன்னார்கள். இவ்வணுகுமுறையில் அவருக்கு நம்பிக்கை வந்ததால், அவருக்குச் சொல்லப்பட்ட எல்லாவற்றையும் கடைப்பிடிப்பது என்று தீர்மானித்தார். விற்பனையை ரூ.580 லட்சமாக உயர்த்த முடியுமா என்றுகூட அவருக்கு ஆசை வந்தது. ஆனால் அந்த அளவிற்குப் போவது பேராசையாக இருக்குமோ என்று தயங்கினார். ஆகவே அடுத்த இரண்டு ஆண்டுகளில் விற்பனையை இரண்டு மடங்கு ஆக்கினால் போதும் என்ற முடிவுக்கு வந்தார். இந்த இரட்டிப்பை ஒன்றரை ஆண்டு அல்லது ஓர் ஆண்டிலேயே பார்த்துவிட்டால், இன்னும் சிறப்பாக



இருக்கும் என்று ஒரு பக்கம் நினைத்தார்.

1998ஆம் ஆண்டு இறுதியில் இப்புதிய முயற்சியைத் தன்னுடைய கம்பெனியில் தொடங்கினார். அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்திலேயே பொங்கல் சமயத்தில் ரூ.90 லட்சத்திற்கு அவருக்கு ஓர் ஆர்டர் கிடைத்தது. தொடர்ந்து 20 மாதங்களுக்கு ஆர்டர்கள் வந்தபடியிருந்தன. இந்த 20 மாத இறுதியில் கையிலிருந்த மொத்த ஆர்டர்களின் மதிப்பு ஒன்பது கோடியை எட்டியது. இப்பொழுது வந்துள்ள ஆர்டர்களுக்கு ஏற்றாற்போல் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய பொறுப்பு வந்தது.

ஆன்மாவைப் பொருத்தவரை சிறிய கம்பெனி, பெரிய கம்பெனி என்ற வித்தியாசம் அதற்கில்லை. இம்மாதிரியான ஆர்டர் பெருக்கத்தை ரூ.40 கோடி, ரூ.260 கோடி ஆண்டு விற்பனை உள்ள கம்பெனிகளிலும் பார்த்திருக்கிறோம். ஆன்மாவின் செயல்பாடு தொடரும் வரை வியாபார அபிவிருத்தி என்பது நிற்பது இல்லை.

மேற்கண்ட உண்மை, விற்பனைக்கு எந்த அளவு பொருந்துமோ அதே அளவிற்கு உடல்நலம், படிப்பு, அரசியல் என்று எல்லாத் துறைகளுக்கும் பொருந்தும். ஆன்மா என்பது அறிவையும், உடம்பையும் விடச் சக்தி வாய்ந்தது. ஆன்மாவின் சக்தியைத் தொழில் வளத்திற்குப் பயன்படுத்துவதைப் போலக் கல்வித் துறையிலும் மற்றும் அரசியலிலும் தாராளமாகப் பயன்படுத்தலாம். மேற்கண்ட கம்பெனியில் ஆன்ம சக்தி செயல்பட ஆரம்பித்தவுடனேயே வருகின்ற ஆர்டரில் நூறு சதவிகிதம் பெருக்கம் தெரிந்தது. இரண்டு ஆண்டுகள் முடிவதற்குள் ஆர்டரில் 15 மடங்கு அபிவிருத்தி தெரிந்தது. இம்மாதிரி தன்னுடைய ஆன்மாவின் சக்தியைத் தூண்டி எழுப்பக்கூடிய திறமை படைத்தவர்கள் தன்னுடைய குடும்ப வாழ்க்கையிலும் இப்பரிசோதனையைச் செய்து பார்க்கலாம். இப்படி ஒரு சக்தி இருக்கிறது என்பதை வாசகர்களுக்கு எடுத்துக்காட்டத்தான் வியாபாரத் துறையில் அதனுடைய செயல்பாட்டை உதாரணமாகக் காட்டி, இக்கட்டுரையை எழுதியுள்ளேன். உதாரணத்தை வியாபாரத்திலிருந்து எடுத்திருந்தாலும் எத்துறையிலும் இத்தகைய

அபிவிருத்தியை ஆன்மசக்தி உறுதியாகக் கொண்டுவர வல்லது என்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன்.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

ஸ்ரீ அரவிந்தர் நெப்போலியனாக இருந்தார்; அன்னை எலிசபெத் மகாராணியாக இருந்தார் என்பதை அன்னை விவரிக்கின்றார். அவர்கள் தாங்கி வரும் சக்தி நெப்போலியனில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இருந்தது; வாழ்நாள் முழுவதும் அல்ல என்கிறார் அன்னை. காதரீன், லூயி, எலிசபெத் இவர்களில் ஒரு குறுகிய காலமே அன்னை சக்தியிருந்தது. சக்தி தன் காரியத்திற்கு உரியவரைத் தேர்ந்தெடுத்து, அவர் மூலம் வந்த வேலையைப் பூர்த்தி செய்து, விலகுகிறது. அந்தச் சக்தியுள்ள காலம், அவர்கள் வாழ்வில் பொற்காலமாகும்.

கருவியின் வாழ்வில் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்படுவதைச் சமூகக் கண்ணோட்டத்தினாலோ, மனத்தின் பார்வையாலோ நாம் கணிக்க முடியாது. பொதுவாக அவற்றிற்கு எதிராகவும் இருக்கும். பரிணாம வளர்ச்சிக்கு உதவும் காரியங்கள் அவை.

(e.g. Louise of France played such a role in the life of Louis XIV).

***நெப்போலியன், எலிசபெத், லூயி போல் செயல்பட மனத்தால் சமூகத்தைக் கடக்க வேண்டும்.***



## சுப சகுனம்

கர்மயோகி

- ✡ சுபமாக முடிவதைச் சுப சகுனம் காட்டும்.
- ✡ சுப சகுனம் அர்த்தமுள்ள ஆரம்பம்.
- ✡ அது முடிவைத் தன்னுட்கொண்ட அர்த்தபுஷ்டியுள்ள ஆரம்பம்.
- ✡ ஒருவர் மகாபுருஷனாக உலகில் வாழ்வதை அவர் பிறந்த சமயம் சுற்று வட்டாரம் பெற்ற சுபிட்சம் குறிக்கும்.
- ✡ நம் வாழ்வின் முடிவில் நம் உலகம் செழிப்பாக, இன்று நம்மைச் சுற்றியுள்ளவர் அதன் அறிகுறியைக் காண வேண்டும்.

  **நம்முள் - அகத்தினுள் - அவ்வறிகுறி நல்லெண்ணம்.**

  அகத்தின் நல்லெண்ணம் புறத்தின் கலகலப்பான குதூகலம்.

  அன்னை அதை cheerfulness சந்தோஷம் என்கிறார்.
- ✡ ஒருவர் சந்தோஷம் அவர் உலக சுபிட்சம்.

  சுபிட்சம் சந்தோஷமாக ஆரம்பிக்கிறது.

  சுபிட்சத்தை நாடுபவருடைய ஆரம்பம் சந்தோஷம்.
- ✡ சாதனையை நாடுபவரின் சந்தோஷம் தெம்பான திறமை.

  தெம்பான திறமை சுறுசுறுப்பால் வெளிவரும்.

  சுறுசுறுப்பு சும்மா உட்கார விடாது.

  சாதனையின் ஆரம்பம் வேலை செய்யும் விறுவிறுப்பு.
- ✡ பெரும் படிப்பின் ஆரம்பம் பார்ப்பதையெல்லாம் படிக்கும் ஆர்வம்.
- ✡ ருசியான சமையல் பிறர் சாப்பிட்டு மகிழ்வதில் பெறும் சந்தோஷம்.
- ✡ தலைமையின் ஆரம்பம் பிறர் விரும்பக் கட்டுப்படுவது.
- ✡ சங்கீத மேதையாவதின் ஆரம்பம் இசை குரலாக எழுவது.
- ✡ பெரும் செல்வம் சேர்வதன் ஆரம்பம் அயராத உழைப்பு.
- ✡ பிரபலத்தின் ஆரம்பம் இனிமையான சொல்லின் புன்னகை.
- ✡ சுமுகமான திருமணத்தின் ஆரம்பம் பிறர் இனிக்க நடப்பது.

காதலின் ஆரம்பம் ஜீவன் ஜீவனோடு இணைவது.

- ✡ பண்பின் சிறப்பு பலருக்கும் பயன்படுவதின் ஆரம்பம், கருணை நிறைந்த கனிவான உணர்வு.
- ✡ குடும்பத்தின் பிரபலம் பொறுப்புணர்ச்சியில் ஆரம்பிக்கிறது.
- ✡ **ஆரம்பம் அழிவது சரணாகதி யோகமாவது.**
- ✡ விஞ்ஞானத்தின் ஆரம்பம் வினோதம் கண்ணில் படுவது.
- ✡ எதிர்காலம் புரிவதின் ஆரம்பம் கடந்தகால சுபிட்சம்.
- ✡ நல்ல முடிவின் ஆரம்பம் இனிமையான மலர்ச்சி.
- ✡ வெற்றியின் ஆரம்பம் பொங்கி வரும் சந்தோஷம்.
- ✡ புரிவதின் ஆரம்பம் படிக்க ஆர்வம்.
- ✡ தெளிவின் ஆரம்பம் நிதானம்.
- ✡ வளரும் செல்வத்தின் ஆரம்பம் நல்லெண்ணம் நயமான நாகரீகமாகி, நாலு பேர் அகமகிழ்தல்.
- ✡ பெருமகசூலின் ஆரம்பம் களை வளராத பயிர்.
- ✡ சுதந்திரத்தின் ஆரம்பம் தியாகம்.
- ✡ பெருவாரியான நண்பர் குழாம், நட்பில் பெறும் பெருமையில் ஆரம்பிக்கிறது.
- ✡ தெய்வ தரிசனத்தின் ஆரம்பம் சத்தியம் நெஞ்சில் இனிப்பது.
- ✡ சொல் நிலைப்பதின் ஆரம்பம் சுருதி ஜீவனை ஆட்கொள்வது.

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஆத்ம சமர்ப்பணம் பூர்த்தியாகும்பொழுது மனிதன் காலத்தைக் கடந்தவனாகிறான். சிருஷ்டி, தன் பூர்வோத்திரத்தை நாடும் மார்க்கம் அது.

***என்னை உன் உடமையாக்கிக்கொள்.***





## P.86 His mind no more cast into Matter's mould.
**அவன் மனம் ஜடத்தின் அச்சில் வார்க்கப்படவில்லை.**

- ✡ **அற்புத வலிமை எல்லையைக் கட்டுமீறி உடைத்துக்கொண்டு வருகிறது.**
- ✡ **அவள் மந்திரவாதியின் தந்திர யுக்திகளை ஏற்று வருகிறாள்.**
- ✡ **பிரமாதமான அவள் சொற்பெருக்கின் சூத்திரம்,**
- ✡ **சொர்க்கமும், நரகமும் பூமிக்கு வாயிலாகும் வரை,**
- ✡ **பிரபஞ்சம் அழியும் மனிதனின் அடிமையாகும்.**
- ✡ **திரையிட்ட ஊர், பேரறியாத தெய்வத் திருக்கூட்டம்.**
- ✡ **மாறுபட்ட மனம் மனித வாழ்வைத் தொடுகிறது.**
- ✡ **உலகைச் சிருஷ்டித்த மந்திரவாதியாக அவர்கள்,**
- ✡ **சுயகட்டுப்பாட்டின் சுதந்திரப் பாதைகள்.**
- ✡ **மந்திரக் கீறலுக்குக் கட்டுப்பட்ட இலட்சியத்தின் போலி.**
- ✡ **தன் செயலுக்கு உலகைக் கூட்டாளியாக்கி,**
- ✡ **தன் பயங்கரவாதத்தின் கருவியாக அவர்களை மாற்றுகிறாள்.**
- ✡ **முடியாத சூழலுள் மூழ்கி எழுந்து,**
- ✡ **எல்லா முறைகளுக்கும் சூட்சும வழி கண்டு,**
- ✡ **பல லோகங்களைத் திருமணத்தாலிணைக்கக் கற்பை விலக்குகிறாள்.**
- ✡ **சிருஷ்டியின் சிறப்பான செயலின் அம்சங்கள்,**
- ✡ **கற்பனைக்கெட்டாத ஞானக்குவியலின் சித்ரகூடம்.**
- ✡ **இறைவனின் லீலைக்குரிய சிறப்பு கலைக்களஞ்சியமாயிற்று.**
- ✡ **மாயையை மகிமையாக்க அவளெழுப்பிய ஸ்தாபனம்.**
- ✡ **புதைந்து கிடக்கும் புதுமைக்கு அளிக்கும் விடுதலை.**

✡ வரம்பில்லாத் தெய்வத்தின் திருநடச் சாலை.
✡ அடித்து மோதிச் செல்லும் அலங்கோலத்தின் கட்டுப்பாடு.
✡ அனந்த லோகத்தை அர்த்தபுஷ்டியாக்கும் அடிச்சுவடுகள்.
✡ அடிமன ஆர்ப்பாட்டம் எழுப்பிய ஊற்றுகள்.
✡ இருண்ட லோகத்தின் இஷ்டத்தின் இரு முனைகள்.
✡ சட்டத்தை மீறும் சொர்க்க லோக சத்திய சுதந்திரம்.
✡ அழிவற்ற லோகத்தின் ஆழ்ந்த எண்ணங்கள்.
✡ கோவிலின் பின்னாலெழும் கோபுரத்தின் அசரீரி.
✡ தெய்வம் உள்ளெழுந்து ஆகாச லிபியாக அறைகூவும் எச்சரிக்கை.
✡ மின்னலென எழும் தீர்க்க தரிசனம் எட்டிப் பார்க்கிறது.
✡ தெய்வக் குரல் எழுதும் ஓலைகள்.
✡ திடுக்கென எழும் விளக்கமான பிரம்மம்.
✡ பரமாத்மாவின் சுவடறியாத செயல்கள்.
✡ அற்புத முடிச்சின் ஆத்மீக உயர்வு.
✡ பிரம்மாண்டமான காரியத்தின் விளங்காத யுக்திகள்.

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

அளவுகடந்த ஆசையாலோ, பதட்டத்தாலோ ஆட்கொள்ளப்பட்டபோது, அதைச் சமர்ப்பணம் செய்ய முனைவது நல்லது. சமர்ப்பணம் நிலையை நிதானமாக்கும். அந்தப் பதட்டத்தையே சமர்ப்பணம் செய்தால், அதைவிடப் பெரிய நல்லதில்லை.

*சமர்ப்பணமான பதட்டம் பெரிய நல்லது.*



# முன்னேற்றம் தரக்கூடிய சாதனை

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

**N.** அசோகன்

## ORGANISATION - முறைப்படுத்துதல் :

Organisation என்பது சாதனை புரிவதற்கு மிகவும் அவசியமான ஒரு கருவி. Organisation என்றால் என்ன? செய்கின்ற வேலையை முறைப்படுத்தி, ஒழுங்காக, முறையாகச் (systematic) செய்வது. முறைப்படுத்துதல் என்பது மனதின் திறனைக் குறிக்கும். அது ஒரு சூட்சுமமான, கண்ணுக்குத் தெரியாத சக்தி. ஒரு ஸ்தாபனம் முறையாக, ஒழுங்காக, systematicஆக வேலை செய்தால் மட்டுமே, அதை organised முறைப்படுத்தப்பட்ட அல்லது முறையான, ஒழுங்கான, தவறில்லாத ஸ்தாபனம் என்று கூறுவர். அங்கு நடக்கின்ற நிகழ்ச்சிகளின் நேர்த்தியை நம்மால் physicalஆக உணர முடியும்; பார்க்க முடியும்.

நம் செயலையும், வாழ்வையும் முறைப்படுத்தும்பொழுது நம்முடைய பயன்படுத்தப்படாத சக்தி அங்கே ஒருமுனைப்படுத்தப்பட்டு, வீணாகாமல், மேலெழுந்து நம் தாழ்ந்த செயலை உயர்ந்த செயலாக, சாதனைக்குரிய செயலாக மாற்றுகிறது. அந்த முறைப்படுத்தப்பட்ட சக்தியுடன் நம்முடைய திறமையும், அறிவும் சேரும்பொழுது அற்புதம் நிகழ்கிறது. உதாரணத்திற்குச் சிறு குழந்தையை எடுத்துக் கொள்வோம். அந்தக் குழந்தையின் சக்தி, காட்டாற்று வெள்ளம் போல் வெளிப்படுகிறது. அதையே ஒழுங்காக, ஒரு திறமையாக மாற்றப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புகிறோம். அங்கே கல்வி போதிக்கப்பட்டு, குழந்தையின் அறிவு மேலோங்கி முறைப்படுத்தப்படுகிறது. இதனால் குழந்தையின் அறிவு விரிவடைந்து, பயனுள்ளதாக மாற்றப்படுகிறது. வாழ்விலே குழந்தைக்கு ஒரு லட்சியம், சாதிக்க

வேண்டும் என்கின்ற எண்ணம் ஏற்படுகின்றது. இங்கே என்ன நடக்கின்றது என்று பார்ப்போம். ஆசிரியரின் சொல்லிக் கொடுக்கும் திறமையும், குழந்தையின் கற்றுக்கொள்ளும் ஆர்வமும் ஒன்று சேர்ந்து, ஒரு புதிய உலகைப் படைக்கும் குழந்தையை உருவாக்குகிறது. இந்தக் கல்வி முறை இல்லை என்றால், குழந்தையின் சக்தி தவறான வழிகளில் சென்று, வீணாகின்றது.

சமூகம் அதற்குரிய வேலைகளைச் செய்வதற்காகத் தன்னைத் தானே முறைப்படுத்திச் செயல்படுகின்றது. இதைத்தான் நாம் Local Administration, Government Secretariat, etc., என்று அழைக்கின்றோம். கல்வி நிலையங்கள் அறிவுச் செல்வத்தைக் கொடுப்பது போல், தொழிற்சாலைகள் பொருட்களையும், நீதிமன்றம் நீதியையும், தபால் நிலையம் தபாலையும், ஆஸ்பத்திரிகள் நோய்க்குத் தகுந்த சிகிச்சையையும் அளிக்கின்றன. இந்த ஸ்தாபனங்கள் எல்லாம் ஒழுங்காக, முறையாகச் செயல்படுவதற்கு அடிப்படை அங்குள்ள சட்ட திட்டங்களே ஆகும். யார் எந்தச் செயலை, எப்படிச் செய்ய வேண்டும் என்று வரையறுத்து இருப்பார்கள். அப்படிப்பட்ட வரையறை இல்லை என்றால், அங்கே நாம் காண்பது குழப்பமும், கூச்சலும்.

இன்று சாலைப் போக்குவரத்து விதிமுறைகள், Traffic Rules என்ற ஒழுங்குமுறை இல்லையென்றால், போக்குவரத்து குளறுபடியாகி, ஸ்தம்பித்துவிடும். அதேபோல் பள்ளிக்கூடத்தில் கால அட்டவணை, வகுப்புச் செயல்பாட்டை முறைப்படுத்துகிறது. சட்டங்கள், விதிமுறைகள், நீதிமன்றத்தைத் திறம்படச் செயல்பட வைக்கின்றன; நியாயம் வழங்க உதவுகின்றன.

ஒரு தொழிற்சாலை என்று எடுத்துக்கொண்டால், அங்கு குறிப்பிட்டுள்ள விதிமுறைகள் (Standard Operating Procedures) செயல்களை முறைப்படுத்தவும், செயல்கள் ஒன்றன்பின் ஒன்றாக, வரிசைக்கிரமமாக, முறையாகச் செயல்பட்டுத் தரமான பொருளை உற்பத்தி செய்யவும் உதவுகின்றன. ஒரு ஸ்தாபனம் என்று எடுத்துக் கொண்டால், அதற்கு முக்கியமான ஐந்து பிரிவுகள் உண்டு. அவை யாவன:



1) அங்கே வேலை செய்பவர்கள் (People).
2) பணம் (Money).
3) தொழில்நுட்பம் (Technology).
4) விற்பனை (Marketing).
5) Organisation (Systems & Procedures, etc.)

இந்த ஐந்து பிரிவுகளும் முறையாகச் செயல்படும்பொழுதுதான் அந்த ஸ்தாபனத்தின் விற்பனை, உற்பத்தி அதிகரிக்கும். கம்பெனி லாபகரமாகச் செயல்படுவதுடன், ஒரு மேலான வளர்ச்சியை நோக்கியும் செல்லும்.

எந்தக் கம்பெனியில் இந்த ஐந்து பிரிவுகளுக்கும் இடையே co-ordination (ஒருங்கிணைத்தல்) இல்லையோ, அந்தக் கம்பெனி விரைவில் தானிருக்கும் இன்றைய நிலையிலிருந்து சரிவதைக் காணலாம். உதாரணமாக, ஒரு கம்பெனி தரமான பொருளை உற்பத்தி செய்யலாம். அந்தக் கம்பெனியின் விற்பனையாளர்கள் உற்சாகம் உடையவர்களாக இல்லையென்றால் (not motivated) அந்தத் தரமான பொருளும் சந்தையில் விலைக்குப் போகாது. கம்பெனியினுடைய (sales), விற்பனை கீழே இறங்குவதைக் காணலாம். அதே போல் ஒரு கம்பெனியில் நல்ல பொருள் இருந்து, தரமான ஆட்கள் இருந்து, நல்ல மார்க்கெட்டும் இருந்து, கம்பெனிக்குப் போதிய பண வசதி இல்லையென்றால், அந்தக் கம்பெனியால் குறித்த சமயத்தில் வாடிக்கையாளர்களுக்குப் பொருட்களைக் கொடுக்க முடியாது. எந்தக் கம்பெனி தன்னுடைய ஐந்து பிரிவுகளையும் முறைப்படுத்தி, ஒருங்கிணைத்து (co-ordinate), வேலை செய்பவர்களை உற்சாகப்படுத்திச் செயல்படுகின்றதோ, அந்தக் கம்பெனிக்குப் பொருள் தட்டுப்பாடோ, பணப் பற்றாக்குறையோ, மார்க்கெட் சரிவோ இருக்காது. கம்பெனி தனது வாடிக்கையாளர்களைத் தொடர்ந்து சந்தோஷமாக வைத்துக்கொள்ள முடியும் (satisfied customers & better customer relationship).

ஒரு தனி மனிதன் என்று எடுத்துக்கொண்டாலும், மனம்

ஒழுங்கைப் போற்றி, உணர்வு அதை ஏற்று, செயலை முறைப்படுத்தி, ஒழுங்காகச் செய்யும்பொழுது, அங்கே சாதனை பிறக்கின்றது. நம் எல்லோருக்கும் சக்தி, திறமை, நேரம் என்பவை எல்லாம் நம் கைக்குள் இருக்கின்றன. இவை யாவற்றையும் நாம் சரியான முறையில், சரியான செயலில் முறைப்படுத்திச் செயல்பட்டால், சாதனை என்பது அன்றாட நிகழ்ச்சியாகும்.

இன்று வாழ்க்கையில் சாதித்தவர்களையும், மற்றவர்களையும் கூர்ந்து நோக்கினால், சாதித்தவர்கள் தங்கள் வாழ்க்கையை முறைப்படுத்தி, கட்டுக்கோப்பாக அமைத்து, நடத்திச் சென்றது தெளிவாகத் தெரியும். வாழ்வில் தோற்றவர்களுடைய வாழ்க்கையை கவனித்துப் பார்த்தால், அவர்கள் ஒரு குறிக்கோள் இல்லாமல், தான் தோன்றியாகத் தறிகெட்டுச் செயல்பட்டது தெரியும். இதைப் பார்க்கும் பொழுது organisation என்பது ஒரு தனி மனிதனின் வாழ்வில் சுயகட்டுப்பாடு என்ற இடத்தை நிரப்புகிறது. சுயகட்டுப்பாட்டுடன் வாழும் மனிதன் குறித்த நேரத்தில் செயல்படுபவனாகவும், தன்னுடைய வருமானத்திற்குள் செலவு செய்பவனாகவும் (கடன் இல்லாத வாழ்க்கை வாழ்பவனாகவும்), சுமுகமான உறவு உடையவனாகவும், நேர்மையானவனாகவும் இருப்பதுடன், வாழ்வில் தொடர்ந்த முன்னேற்றம் அடைபவனாகவும் இருப்பான். ஆகவே, சுயகட்டுப்பாடு என்பது தனி மனிதனுடைய வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதது. இதற்கு மாறாகக் கட்டுப்பாடில்லாத வாழ்க்கை உடையவன், வாழ்வில் தொடர்ந்த தோல்வியைச் சந்திப்பவனாக இருப்பான்.

சாதாரண வாழ்வில் சாதிப்பதற்குச் சுயகட்டுப்பாடு அவசியம் என்றால், ஆன்மீக வாழ்வில் நாட்டம் உள்ளவர்க்குக் கடுமையான சுயகட்டுப்பாடு அவசியம் என்றாகிறது. நம்முடைய வாழ்வு ஆன்மீகப் பண்புகளாகிய ஆர்வம் (aspiration), சரணாகதி (surrender), சமர்ப்பணம் (consecration), தரமான செயல் (perfection), உண்மை (purity), மேலும், விட்டுக் கொடுப்பது (self-giving) போன்ற பண்புகளால் நிரப்பப்பட்டு, முறைப்படுத்தப்பட்டு, செயல்படுத்தப்படுகிறது என்றால், நம் சாதாரண வாழ்வு ஆன்மீக வாழ்வாக



மாறுகிறது, அதாவது வாழ்வு யோகமாக மாறும் பாதையில் காலடி எடுத்து வைக்கின்றது என்று கூறலாம். அப்படிப்பட்ட வாழ்வு அன்பருக்கு ஆன்மீக அதிர்ஷ்டத்தைப் பெற்றுத் தருகிறது.

தொடரும்....

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

“அன்னையைப் பற்றிப் பேச ஆரம்பித்தால் எல்லாமே மறந்து விடுகிறது”; “உங்களைப் பார்த்தால் எனக்கு எதுவுமே நினைவில் இருப்பது இல்லை” - எந்த விஷயம் நம்மை அதன்பால் ஈர்த்து மற்றவற்றை மறக்கச் செய்கிறதோ, அது தெய்வீகமானது.

***மற்றதை மறக்கச் செய்யும் தெய்வீகம்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஆன்மீக சித்தி, அதிர்ஷ்டம், தனக்கோ, நாட்டுக்கோ, பெரிய சாதனை ஆகியவை தனி நபரின் ஆர்வத்தால் இரு வகைகளாக நிகழ்வதுண்டு.

1. திடீரென நிலைமை மாறிப் பலன் வருதல்.
2. கொஞ்சம், கொஞ்சமாக அறிகுறிகளாக ஆரம்பித்து, சிறுபலன், பெருஞ்சாதனையாவது.

## ஒரு புது முறையைக் கற்க வேண்டும் என உடல் உணர்கிறது.

✡ வெளிநாட்டிற்குப் போனால் புதிய சாப்பாடு பழக வேண்டும்.

ஸ்பூனால் சாப்பிடக் கற்றுக்கொள்ள வேண்டும்.

புதிய உடை பழக வேண்டும்.

✡ இராணுவத்தில் சேர்ந்தால் புதிய நடை (marching) பழக வேண்டும்.

✡ இங்கிலாந்து போனால் நாம் இது வரை பேசிய ஆங்கிலத்தை அவர்கள் போலப் பேசப் பழகிக்கொள்ள வேண்டும்.

✡ அன்னை வாழ்வை மனம் ஏற்றால், பிறர் கோணத்தில் புரிய முயல வேண்டும்.

✡ அன்னை வாழ்வை உடல் ஏற்றால், நாம் செய்யும் எல்லாச் செயல்களையும் புதியதாகச் செய்யக் கற்க வேண்டும்.

புத்தகத்தை மேஜை மேல் வீசுபவர், குழந்தையை உட்கார வைப்பது போல் புத்தகத்தை மென்மையாகக் கையாளப் பழக வேண்டும்.

மழை பெய்த பின் நிலத்திற்குப் போகும் விவசாயி, பயிர் செழிப்பாக வளர மழை உதவும் என நினைக்கிறான்;

அன்பன் மழையால் பயிர் சந்தோஷப்படுகிறது என உணருகிறான்.

காலையில் எழுந்து குளிப்பது பழக்கம்;

அழுக்குப் போகக் குளிக்கிறோம்;

அன்பன் குளிக்கப் போகும்பொழுது, ‘என் ஆத்மா தங்க, உடல் தூய்மையாக இருக்க வேண்டும்’ என அறிகிறான்.

எந்தச் செயலையும் பல கோணங்களில் எடுத்துக்கொள்ளலாம்.



எந்தச் செயலையும் அன்னை நோக்கில், ஆத்மாவின் கோணத்தில் எடுத்துக்கொள்வது புதுமை.

புது உலக வாழ்வு தேடும் புதுமை அது.

✡ உடல் சாப்பிட, எழுந்து நடக்க, தூங்கப் பயின்றது.

அன்பனானபின் புதிய சாப்பிடும் முறையை அறிந்து, உடல் பயில வேண்டும்.

எழுந்தால், உடல் இனிக்கும்படி எழுவது அன்னைக்கு அவசியம்.

தூக்கம் தூக்கமாக இல்லாமல், conscious rest ஆத்மா விழிப்புடன் பெறும் ஓய்வாக இருக்க வேண்டும்.

தூங்கி எழுந்தால் தியானம் முடிந்தது போலிருக்கும்.

ஆத்ம விழிப்புள்ளவர் தூங்கினால், தாம் தூங்குகிறோம் என அறிவார்.

எழுதும்பொழுது spelling புதியதாகக் கற்பது போன்ற உணர்வு ஏற்படும்.

பல மாதம் படுக்கையானவர் நடக்கும்பொழுது புதியதாக நடக்கும் உணர்வு எழுவதும் உண்டு.

❀ ❀ ❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

நெடுநாளாகத் தடையான காரியத்தைப் பிரார்த்தனையும் பூர்த்தி செய்யாவிட்டால், அதை ஆராய்வது நல்லது. திறமை, விழிப்பு, நோக்கம், பண்பு ஆகியவற்றின் கண்ணோட்டத்தில் பூர்த்தியான ஒரு காரியத்துடன் இதை ஒப்பிட்டுப் பார்த்தால், எது தடையென விளங்கும்.

***திறமை, விழிப்பு, நோக்கம், பண்பு சிக்கலை அவிழ்க்கும்.***

# குடும்பம், நட்பு, உறவு, வேலை, வருமானம் என்று இவற்றை எல்லாம் அன்னைமயமாக்குவதற்கான வழிகள்

கர்மயோகி

## அன்னைமயமாக்குவது

ஒரு வேலையைச் சரியாகச் செய்வதில்லை என்பதற்கு எதிரானது சரியாகச் செய்வது. அதைச் சிறப்பாகச் செய்யலாம். அதுவே உயர்ந்த நிலை. அவ்வேலையை அன்னைமயமாக்குவது எனில், அன்னை அவ்வேலையில் வெளிப்படுவது. உதாரணமாக,

1) மாணவன் சரியாகப் படிப்பது என்பது 60 அல்லது 80 மார்க் பெறுவது.
2) சிறப்பாகச் செய்வது எனில், முதல் மார்க் வாங்குவது.
3) முதல் மார்க் பெறுவதற்கு மனப்பாடம் செய்வது ஒரு வழி; பாடத்தைப் புரிந்துகொண்டு பெறுவது சிறந்த வழி.
4) பாடத்தில் அன்னையுண்டு. அது வெளிவருவது என்பது பாடம் உயர்ந்த நிலையை அடைவது.
5) மாணவனுக்கு அன்னையுண்டு. அது வெளிவருதல் மாணவனுக்குச் சிறப்பு.
6) மாணவனிடமுள்ள அன்னை, பாடத்திலுள்ள அன்னை மூலம் வெளி வருவது படிப்பை அன்னை மயமாக்குதல் எனலாம். மாணவனின் மேதாவிலாசம் பாடத்தின் மேதாவிலாசத்தின் மூலம் வெளிவருவது ஆகும்.

இவை படிப்படியான உயர்ந்த பரிணாமக் கட்டங்கள். நாம் நமக்குரியதில் ஆரம்பித்து, முடிந்த வரை உயர்ந்தால், இத்தலைப்பு நம் வாழ்வில் பலிக்கும். சட்டம் அனைத்திற்கும் ஒன்றே. தோற்றம் வேறு. மரம் பலன் தருவது பழம். படிப்பு பலன் தருவது வேலை. மரம் பழுப்பதும், படிப்பு வேலையாக மாறுவதும் முடிவான பலன் பெறுவது ஆகும். மலர்ச்சி மரத்தைப் பொருத்தவரை மலர். படிப்பில் மலர்ச்சி



கல்வி அறிவைச் சிறக்கச் செய்வது.

✡ குடும்பம் சரியாக இருப்பது எனில் போதுமான வசதி, பொறுப்பு, பாசம், பற்று, அமைதி, மன நிம்மதி இருப்பது என்று கூறலாம்.

✡ குடும்பத்திற்குச் சிறப்பு எது? ஊரில் குடும்பம் முதன்மையாகி, அந்நிலையில் எதிர்ப்பு இல்லாமல், பொறுப்பு, பாசம், பற்று, அமைதி, மனநிம்மதி உயர்வதாகும்.

✡ பெறும் சிறப்பும் சிறந்த வழியில் வர வேண்டுமானால், முதன்மையான குடும்பம் அதன் பெரிய அம்சங்களை அதிகாரம், சொத்து, யுக்தி, தந்திரம், ஏமாற்றுவது, நேரத்திற்குத் தகுந்தாற்போல் மாறுவது போன்றவையால் பெறாமல், அந்தஸ்து, தர்மம், நியாயம், நாணயம், நம்பிக்கை, காலத்திற்கும் அழியாத கருத்துக்களால் பெறுவதாகும்.

✡ குடும்பத்தில் அன்னையுண்டு. அது அடுத்த உயர்ந்த கட்டம். தர்மம், நியாயம், நாணயம், நம்பிக்கை பொதுவானவை. குடும்பத்திற்குரிய தர்மம், குடும்பத்திற்குரிய நியாயம், குடும்பத்திற்குரிய நாணயம், குடும்பத்திற்குரிய நம்பிக்கை, குடும்பத்தின் அன்னையாகும். உதாரணமாக, நாம் செய்யும் தொழில் வியாபாரமானால், வியாபாரி தனக்குச் சேர வேண்டியதை வசூல் செய்வான். தான் கொடுக்க வேண்டியதை வந்து கேட்டால், கொடுப்பான். குடும்பத்தில் அதே நியாயம், நாம் பிறருக்குக் கொடுக்க வேண்டியதை நாமே முன்வந்து தருவதும், நமக்குச் சேர வேண்டியதை அவர்களே தரும்பொழுது பெறுவதும் என மாறும்.

✡ அதே போல் நாம் அன்பர் என்பதால் நம்முள் உள்ள அன்னை நமக்குரிய சட்டங்களை மேலும் மாற்றுவார்.

✡ குடும்பத்தின் அன்னையும், நம் அன்னையும் வெளிப்பட்டுக் கலக்கும் பொழுது கொடுக்கல், வாங்கல் இருக்காது. அனைவரும் தங்கள் பணத்தை நம்பிக்கையால் நம்மிடம் கொடுத்து வைப்பார்கள். நம்மால் முடிந்ததை ஏற்று, அங்கிருந்து உயர முயல்வது அறிவுடைமை. எதைச் செய்தாலும் நம் energy முழுவதும் exhaust ஆவது சட்டம்.

பணம் அனைவருக்கும் புரியுமிடம். அதன் மூலம் நாம் இதை விளக்கலாம்.

**பூரண யோகம்:** வாழ்வனைத்தும் யோகம் எனக் கூறி வாழ்வை ஏற்கிறது. வாழ்வு விவசாயம், தொழில், மார்க்கட், கல்வி, பணம் என ஆயிரம் வகைகளாக உருவாகியுள்ளது. உருவாகும் வாழ்வு அன்று விவசாயத்தை உற்பத்தி செய்தது. இன்று 10 வருஷ சர்வீஸ் இருக்கும்பொழுது அத்தனை வருஷ சம்பளத்தையும் கையில் கொடுத்து, பென்ஷனும் கொடுத்து, ஓய்வு தருகிறது. வாழ்வு பெரும் வசதிகளை இன்று உற்பத்தி செய்துள்ளது. அவற்றுள் பெருகி வரும் பணம் ஒன்று. ரூ.2,000 சம்பாதிக்கும் டிரைவருக்கு $4000 சம்பளம் கொடுத்து அழைக்கிறது. இதை வாழ்வு எப்படிச் செய்கிறது என நாம் அறியலாம். அது புற நிகழ்ச்சிகளின் அறிவு. அது பூரணமானால், புற அறிவு அக ஞானமாகிறது.

✡ புற அறிவால் வாழ்வு பெரும் வசதிகளைத் தானே உற்பத்தி செய்கிறது.

✡ அக ஞானம் அதையே அகத்தில் அதிகமாக உற்பத்தி செய்யும்.

✡ வாழ்வின் எல்லா அம்சங்களையும் உற்பத்தி செய்வதைவிட ஒரு அம்சத்தை உற்பத்தி செய்வது சுலபம். அது சிருஷ்டி, அன்னையின் சிருஷ்டி எனலாம்.

✡ பூரண யோகம் வாழ்க்கையை விலக்காமல், ஏற்பதால், அவ்வாழ்வை வாழும் மனிதனை, சத்திய ஜீவனாக்குகிறது.

✡ சத்திய ஜீவன் பிறப்பது 30,000 ஆண்டில் நடப்பதை 30 ஆண்டில் நடத்துவது.

வாழ்வை அதன் எல்லா அம்சங்களையும் சிருஷ்டிக்கும்படிச் செய்வது, அதில் ஒரு சிறு பகுதி.

அக ஞானம், புற வாழ்வில் அபரிமிதமான செல்வத்தைச் சிருஷ்டிப்பது, அதிலும் ஒரு பகுதி.

அது பலிக்கத் தேவையானவை:

❀ வாழ்வின் சிருஷ்டித் திறனைப் பற்றிய புற அறிவு;



அது மனத்துள் அக ஞானமாவது.

❀ மனம் சத்தியம், நேர்மை, புனிதம் ஆகியவற்றால் நிரம்பி வழிவது.

பூரண யோகச் சட்டப்படி, ஒருவர் அபரிமிதமான பணத்தைச் சிருஷ்டிக்கத் தேவையானவை:

❀ ஞானம்

❀ சத்தியம்

அது நடைமுறையில் பலிக்க, இன்று நமக்குள்ள திறமை, அதிகபட்சம் சம்பாதிக்கக்கூடிய தொகையை முழு நேர்மையுடன், அன்னை மீதுள்ள நம்பிக்கை மூலம் மட்டும் சம்பாதிக்க வேண்டும். 10,000 ரூபாய் சம்பளம் வாங்குபவர் இந்நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தால், அவர் இது போல் சம்பாதிக்கக்கூடிய தொகை (token initial critical mass) 50 இலட்சமாகவோ, 1 கோடியாகவோ இருக்கும். அதை அவர் சம்பாதித்துவிட்டால், அவரால் அபரிமிதமான பணத்தை உற்பத்தி செய்ய முடியும். அதையும் நிர்ணயிப்பது அவர் பர்சனாலிட்டி.

✡ அன்பர் அவரால் முடிந்த 10 லட்சமோ, 1 கோடியோ நேர்மையாக, அன்னை மூலம் சம்பாதித்துவிட்டால், அவர் பர்சனாலிட்டிக்குரிய 100 கோடியோ, 500 கோடியோ அவரைத் தேடி வரும் என்பது பூரண யோக வாழ்வின் சட்டம். அன்னையை அறியாதவர் இப்படி முன்னேறுவதை நாம் காண்கிறோம்.

**இது நம் வருமானத்தை அன்னைமயமாக்குவதாகும்.**

இதை நாம் தத்துவரீதியாக விளக்க, பூரண யோகத் தத்துவம் வேண்டும். நடைமுறையில் இந்தியாவில் **இது** அவரவர்க்கேற்ப நடப்பதை நாம் காண்கிறோம். நாம் அன்னைக்கேற்ப இதைப் பின்பற்றுவது நமக்குரிய முறை.

**இதை எப்படிச் செய்வது? எங்கே ஆரம்பிப்பது?**

✡ நாம் அன்னை அன்பர் என்பதன் மூலம் சொல்வதானால், நாம் பகவான்,

அன்னை கூறியவற்றை வேதவாக்காக ஏற்க வேண்டும். ஏற்க மனம் நெகிழ்ந்து மகிழ வேண்டும். மீரா, கிருஷ்ணனை அப்படி ஏற்றதால், ராணா கொடுத்த விஷம் அவள் உயிரைப் பறிக்கவில்லை. ஆழ்வார்கள், நாயனார்கள், ரிஷிகள் வாழ்வில் இவை நடந்துள்ளன. எந்தக் கோயில் ஸ்தல புராணமும் 'கோயில் கட்டியவர் வில்வ மரத்தில் பணத்தைப் பறித்தார்' எனக் கூறுகிறது. எந்தக் கோயில் சிலையும் (perfect) சிறப்பாக இருப்பது, 'உருக்கிய தங்கத்தைக் குழந்தை குடித்து அப்படி மாறியது' எனக் கூறும்.

❀ இவை symbolic language மொழியின் உருவகம்.

❀ ரிஷிகள் எவ்வளவு செல்வமும் உற்பத்தி செய்ய முடிந்தது என்பது சத்தியம்.

அவர்கள் காலத்தைக் கடந்தவர் என்பதால், அதற்குரிய முறைகளை அவர்கள் பின்பற்றியதை நமக்குரிய மொழியில் புராணம் கூறுகிறது.

❀ அன்று ரிஷிகள் செய்ததை இன்று எல்லா அன்பர்களும் செய்ய முடியும்.

அவர்கள் காலத்தைக் கடந்த நிலையில் செய்ததை, அன்பர்கள் காலத்துள் காலத்தைக் கடந்த நிலை இருப்பதில் (simultaneous Time) செய்ய வேண்டும்.

அது ரிஷிகள் செய்ததைவிட ஒரு படி உயர்வு.

❀ இதன் உச்சகட்டம் யோகம்.

இதன் குறைந்தபட்சம் வளமான, நேர்மையான, சிறந்த உழைப்பும், திறமையும் உள்ள வாழ்வு.

❀ இதைச் சாதிக்கும் 100 முறைகளை சமீபத்தில் வெளிவந்த "யோக சக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள்" என்ற நூல் கூறுகிறது.

❀ 'இது எனக்குப் பலிக்குமா?' என ஒருவர் கேட்கலாம். அக்கேள்வியை எழுப்பாமல், ஏற்பது நம்பிக்கை.

கேள்வியை எழுப்பினால், நம்பிக்கை இப்பொழுதில்லை; இனி உற்பத்தி செய்ய வேண்டும் என்று பொருள்.

எப்படியும் செய்யலாம் - பலன் முறையைப் பொருத்தது.



❀ **சட்டம்:** மனம் 1 மணி நேரம் அல்லது 1 நிமிஷம் அன்னையின் ஜீவியமாக இருக்க முடியும் என்றால், வாழ்நாள் முழுவதும் அப்படி இருக்கலாம். கேள்வி கேட்காமல் ஏற்று, செய்யும் பரிசோதனை பலித்தால் அருள் அதை நமக்காகச் செய்யும். கேள்வி கேட்டு, சோதனை செய்து, பலனைப் பார்த்து, நம்பினால், நாமே அதை நம் முயற்சியால் செய்துகொள்ள வேண்டும்.

நம்பிக்கை அருளைச் செயல்படச் செய்யும்.

கேள்வி முயன்று பெறும் பாதையைச் செப்பனிடும்.

**உண்மையென்பது என்ன?**

வாயால் சொல்லும் சொல் உண்மையாக இருக்க வேண்டும். அதன் பின் உள்ள நினைவு பொய்யாக இருந்தால், வாய் பேசும் உண்மை, உண்மையாகாது. நினைவு பூரண உண்மையைப் பூண வேண்டும். நினைவும், சொல்லும் நேராக உள்ளபொழுது உணர்வு எரிச்சல்படும்; பொய் சொல்லத் துடிக்கும்; எப்படி உள்ளதைப் பேசுவது எனப் பொருமும்; பொய் எங்கிருந்தாலும் பொய்யே; உணர்வும் உண்மையாக இருக்க வேண்டும். உணர்வு உயிருக்குரியது. உடல் அதற்கும் அடியில் ஆழத்திலுள்ளது. மகளுக்குப் பொன் சங்கிலி கொடுப்பதாகச் சொல்லும், நினைவும், உணர்வும் முன்வரும்பொழுது, கை சங்கிலியை எடுத்துப் பெட்டியில் வைத்துப் பூட்டும். உடல் மனத்தின் உண்மையை ஏற்காது. ஏற்பது அவசியம். ஏற்றுப் பூரிப்பது அவசியம். பூரித்த நிலையில் உடல் புல்லரிக்கும்.

❀ **பூரித்த உடல், ஜீவன் முழுவதும் உண்மையெனக் கூறும்.**

விருந்தினரை வரவேற்பது, குழந்தையைப் பள்ளிக்கு அனுப்புவது, போனில் பேசுவது, கடிதம் எழுதி ஒருவரை வரவழைப்பது எளிய காரியங்கள். பார்ட்னருடன் இலாபம் பங்கு போடுவது, வரன் பார்த்து முடிவு செய்வது, சொத்து வாங்குவது, எலக்ஷனில் நிற்பது போன்றவை பெரிய காரியங்கள்.

✡ பெரிய காரியங்களில் உண்மை, சிரமம்; சிறியதில் உண்மை முடியும்

என்பது பொதுவான அபிப்பிராயம்.

✡ பெரியதில் உண்மை எளியது; சிறியதில் சுபாவம் மிஞ்சும் என்பது ஆன்மீகம்.

✡ எளிமையாக ஆரம்பிக்கப் பெரிய காரியங்களில் உண்மையை ஏற்க வேண்டும்.

✡ தீவிரமாக ஆரம்பிக்கச் சிறிய காரியங்களில் உண்மையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

✡ பெரியதில் ஆரம்பித்துச் சிறியதில் பூர்த்தி செய்யலாம். சிறியதில் ஆரம்பித்துப் பெரியதில் பூர்த்தி செய்யலாம்.

**இரண்டும் அவசியம்.**
**எதுவும் விலக்கல்ல.**

| | | |
|---|---|---|
| ‘எனக்கு எதுவும் முடியாது’ | - | எதுவும் செய்யும் கட்டாயமில்லை. |
| ‘என்னால் முடிந்தவரை செய்கிறேன்’ | - | பலன் முடிந்தவரை வரும். |
| ‘யாராவது எனக்காகச் செய்தால் தேவலை’ | - | பலன் செய்பவருக்குப் போகும். |
| ‘என்னை எவரும் குறை சொல்லக் கூடாது’ | - | எவராலும் உனக்குப் பலன் வாராது. |
| ‘இதெல்லாம் யாராவது செய்கிறார்களா?’ | - | அவர்களைப் போல் நீயும் இருக்கலாம். |
| ‘மனிதனால் முடிவதைச் சொன்னால் தேவலை’ | - | மனிதனுக்குரியது வரும். |
| ‘எனக்கு யாரையும் பிடிக்காது’ | - | உன்னை எவருக்கும் பிடிக்காது. |
| ‘இதெல்லாம் என்னால் சாப்பிட முடியாது’ | - | எதுவும் சாப்பிடக் கிடைக்காது. |
| ‘ஏன் நான் எல்லோரிடமும் நல்ல பெயர் வாங்க வேண்டும்? என்னிடம் எல்லோரும் நல்ல பெயர் வாங்கட்டுமே?’ | - | அனைவரும் உன்னை அநாகரீகமானவனாக நினைப்பார்கள். |



நயத்தக்க நாகரீகம் விரும்புபவர்,

❀ பெயக் கண்டும் நஞ்சுண்டமைவார்.
❀ இழுக்கிழைத்த நண்பர் செய்தது பெரிய நாள் எனக் கருதுவார்.
❀ அகலாது, அணுகாது அரசனிடம் பழகுவார்.
❀ அவர் ‘பெய்’யென மழை பெய்யும்.
❀ உலகம் அவர் உயிரோடிருப்பதால் இயங்குகிறது.
❀ எதையும் அளவோடு செய்யப் பயின்றிருப்பார்கள்.
❀ விருந்தினரை அனிச்சமாக நடத்துவார்.
❀ பிறர் எடுத்துச் சொல்வதற்கு முன் தாமே திருந்துவார்.
❀ அனைவரும் அவரை நல்லவர் என்று கூறுவார்.
❀ எதிரியையும் இழித்துப் பேசமாட்டார்.
❀ கொடுக்கும்பொழுது, பெறுபவராக நடப்பார்கள்.
❀ அனைவரும் ஆத்மா என அறிந்து போற்றுவார்.
❀ கோள் சொல்லமாட்டார்.
❀ குறையை மனத்தில் தாங்கிக்கொள்ளமாட்டார்.
❀ குறையை நிறையாகக் காண்பார்.
❀ பிறர் வாழ மனம் முழுமையாக விழையும்.
❀ ஒட்டுக் கேட்க அவரால் முடியாது.
❀ அவர் மனம் ஆனந்தமாக இருக்கும்.
❀ அவருள்ள இடம் செழிப்பாக இருக்கும்.
❀ கசப்பான வேலையை இனிப்பாக ஏற்றுச் செய்வார்.
❀ குழந்தையுள்ளம் படைத்திருப்பார்.
❀ கடந்ததையும், வருவதையும் கருதாது,
நடப்பதில் முழுநாட்டம் செலுத்துவார்.
❀ அவநம்பிக்கை அவருக்கில்லை.
❀ அதிகாரம் செய்ய அவரால் முடியாது.
❀ எவர் உரிமையையும் அவரால் பறிக்க முடியாது.

❀ பிறர் விஷயத்தில் தலையிடுவது அவருக்குரிய பழக்கமில்லை.

நாகரீகத்தின் சின்னங்கள் பல. அன்னை வாழ்வு நாகரீகத்-தைக் கடந்தது; சத்தியத்தின் அடிப்படையில், சத்தியமாக, சத்தியம் மலரும்படி, சத்திய ஜோதியாய் மலர்வது. யோகத்தை நாடுபவர்க்கு ஆன்மாவின் 12 அம்சங்களும் இன்றியமையாதவை. வாழ்வை யோகமாக ஏற்க அவற்றுள் ஒரு அம்சமாவது பூரணமாக இல்லாமல் முடியாது. அன்பு, உண்மை, ஞானம், மௌனம் போன்ற ஒன்றையாவது முழுமையாக ஏற்பது அவசியம். ஏற்றவை வாழ்வில் அனைத்து முனைகளிலும் முளைத்தெழுவது, ஆத்மா வாழ்வில் மலர்வதாகும். நமக்கு எது வேண்டும் என்பது நம் முடிவு. அனைத்தும் வேண்டுபவர் அனைத்து முயற்சியையும் எடுக்க வேண்டும். எதுவும் வேண்டாதவர் எந்த முயற்சியையும் எடுக்கத் தேவையில்லை. பலன் முயற்சியைப் பொருத்தது.

அன்னையை ஏற்பது என்பது ஆகாயத்தில் நடப்பது போல என்றால், நமக்கு வியப்பாகத் தோன்றும். 1000 ஆண்டுகட்கு முன் வாழ்ந்த மனிதன் இன்று நம் வாழ்வைப் பார்த்தால், அவனுக்கு வியப்பாக இருக்கும்.

- ✡ ரயில், பஸ், கார், விமானம் செல்வது அவனால் பார்த்தும் நம்ப முடியுமா?
- ✡ போனில் பேசுவதை அவனால் எப்படிப் புரிந்துகொள்ள முடியும்?
- ✡ கம்ப்யூட்டர் டைப் செய்வது, அதன் மூலம் பொருள்கள் வாங்குவதும், அவன் கற்பனையைத் தொடுமா?
- ✡ அமெரிக்கா என்றால், அவன் என்ன புரிந்துகொள்வான்?

அவனுக்கு நம் வாழ்வு புதிராக இருப்பது போல், நமக்கு அன்னை வாழ்வு புதிராக இருக்கும். புதிரை அறிவால் விளக்கி, விளக்கத்தை மனம் ஏற்றால், அதையும் நாம் பெறலாம். அதற்கு என்ன செய்வது என்ற கேள்விகள் எழும்.

- ✡ 10,000 ஆண்டுகட்கு முன் வாழ்ந்தவனுக்கு இன்று நமக்குள்ள அறிவு இருந்தது என்பது ஆராய்ச்சியாளரும், ஆன்மீகப் பெருமக்களும் கூறுவது.



- ✡ அறிவு ஒன்றானால், செயலின் தோற்றம்தான் வேறு.
- ✡ அன்னை வாழ்வில் அறிவு ஞானமாகி, மனம் சத்தியஜீவியமாக மாறுவதால் நமக்குள்ள

| | | |
|---|---|---|
| தீமை | - | நன்மையாகிறது; |
| தோல்வி | - | தோல்வியை ஏற்று மறைகிறது; |
| மரணம் | - | மரணமடைகிறது; |
| காலம் | - | காலத்துடன் காலத்தைக் கடந்ததைச் சேர்த்து அற்புதம் செய்கிறது. |

கேள்வி ஒன்றே - இவை நமக்கு வேண்டுமா? வேண்டாமா? 'வேண்டாம்' என்பவரிடம் நமக்குப் பிரச்சினையில்லை.

'அன்னையை அறிந்துவிட்டதால், நமக்கு இது உண்டு' என்று நம்புகிறவர் வழி, முறை, பாதை கேட்டால், கேட்பவர்களுக்குக் கூற வேண்டியதை மேலே சொன்னோம். அதையும் சுருக்கமாகச் சொல்வதானால்,

**தவற்றை விலக்கி, மனம் அடங்கி,**
**நல்ல வாழ்வை மேற்கொள்ள**
**முழுமுயற்சி எடுப்பவர்க்கு முழுப்பலன் காத்திருக்கிறது.**

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஒரு பண்பு உடலின் சொரணையானபின் அதற்கெதிராக மாறி, சுபாவத்துடன் கலக்கிறது. அடக்க முடியாதது அடுத்த பிறப்பில் சமத்துவமாக மனதில் மாறுகிறது.

***உடல் ஏற்ற பண்பு சொரணையாகிறது.***

"அன்னை இலக்கியம்"

# மலரும் மணமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

மகேஸ்வரி

நிகழ்காலத்தில் வாழ்வதென்பதும் ஒருவித தியானம்தான். பரம்பொருள் காலத்தைக் கடந்தது. காலத்தில் இருப்பவர்கள் நாம். ஒரு விதத்தில் காலத்தைக் கடந்த நிலையில் இருக்கும் பரம்பொருள் நிகழ்காலத்திலும் நின்றுகொண்டிருக்கின்றது. சொல்லப்போனால், நிகழ்காலத்தில் வாழும் வாழ்க்கை நிச்சயமானதொன்று. கடந்த காலம் வாழ்க்கையின் மகிழ்வையும், துயரத்தையும் உள்ளடக்கியதொன்று. அது அசைபோட உதவும். காயத்தின் ரணத்தை நினைத்து நினைத்து மருகும். சந்தோஷத்தை நினைத்து நினைத்துக் கற்பனையில் மிதக்கும். இரண்டுமே நிகழ்காலத்திற்குத் துணை செய்யாது. எதிர்காலம் தெரியாத ஒன்று. அப்படி இல்லாமல் எதிர்காலத்தைத் தெரிந்து கொண்டோமென்றால்கூட, அது அவஸ்தையானது. எதிர்காலத்தை நினைத்து மயங்கியோ அல்லது எதிர்பார்த்தோ ஏங்கி வாழும் நிலையாக இருக்கும். இன்றைக்குக் கையிலிருப்பது நிகழ்காலம். இன்றைய பொழுதில் இப்பொழுது செய்துகொண்டிருப்பதில் மட்டும் கவனமிருந்தால் சென்ற காலத்தின் கர்மம் தாக்காது. எதிர்காலத்தின் விளைவு சுடாது. புதியதாய் ஒவ்வொரு கணமும் பிறந்து கொண்டிருப்போம். இப்பொழுதுதான் பிறந்த குழந்தை கண்ணை விழித்தவுடன் பார்க்கும் இடத்திலெல்லாம் புதுமையாய், அதிசயமாய்ப் பார்க்கும். ஏனென்றால் அதற்கு எல்லாமே புதியது. பழையதின் சுவடு இல்லாமல், புதியதின் மகிழ்ச்சியில் கண்ணை உருட்டி உருட்டித் தன்னைச் சுற்றிப் பார்வையைத் திருப்பிக்கொண்டேயிருக்கும். அதற்கு எல்லாமே பழக்கம் ஆகும் வரையிலும் அது தன் பார்வையைப் புதிது புதிதாகப் பார்த்துக்கொண்டே சந்தோஷம் அடையும். நிகழ்காலத்தில் வாழக் கற்றுக்கொண்டால், நாம் பார்க்கும், கேட்கும், உணரும் எல்லாமே புதியதாக, ஆனந்தமாக, மகிழ்ச்சியாக இருக்கும். புதியது



ஒன்றை எங்கு பார்த்தாலும் மனது சந்தோஷமடையும். ஏனென்றால் மனதின் குணங்களில் ஒன்று அது. அன்னையை முதன்முதலாக அறிந்த அனைவரும் அனுபவித்த அனுபவம் அது. பழகிப் போய்விட்டால் அங்கு ஜீவன் இருக்காது. ஜீவன் எங்கிருக்கிறதோ, அங்கு மலர்ச்சி இருக்கும்; சந்தோஷம் தொடரும். நிகழ்காலத்தில் தினமும் நாம் புதுப் பிறவியை எடுக்கலாம். ஒவ்வொரு கணமும் புதியதாகப் பிறக்கலாம்; புதியதைக் கற்கலாம். வருடத்திற்கு ஒரு முறை பிறந்த நாளென்று இருக்காமல், ஒவ்வொரு கணமும் நிகழ்காலத்தில் வாழக் கற்றுக் கொண்டால், பிறந்த நாளை ஒவ்வொரு கணமும் கொண்டு வரலாம். ஆயிரம் பிறவிகளின் பயனை அனுபவிக்கலாம்; நம்முடைய ஆன்மாவுடன் தொடர்புகொள்ளலாம். ஆன்ம விழிப்புடன் செய்யும் காரியங்கள் சத்தியமாக ஜெயிக்கும். அன்னையை ஒவ்வொரு கணமும், நிமிஷமும் புதியதாய் உணரலாம். என்றுமே புதுமை கலையாத புத்துணர்வுடன் வாழலாம். நிகழ்காலத்தில் வாழும் கலையை மல்லிகை கற்றுக்கொண்டதால், வருவதை அப்படியே வாங்கி உள்ளே விடாமல், அப்படியே விட்டுவிட்டு, வரப் போகின்றதைப் பற்றிச் சிந்தனையே இல்லாமல், அப்பொழுது செய்து கொண்டிருப்பதில் தன் முழுக் கவனத்தைச் செலுத்துவதன் மூலம் அன்னையுணர்வில் வாழ்ந்தாள்.

✡✡✡

‘‘என்னக்கா, முகம் பிரகாசமாக இருக்கிறது? காரை நீயே ஓட்டுகிறாயா, இல்லை நான் ஓட்டட்டுமா?’’ என்று கேட்ட மல்லிகைக்கு பதிலாக, காரின் சாவியைக் கொடுத்துவிட்டு இறங்கினாள் முல்லை.

வயது வித்தியாசம் அதிகம் இல்லையென்றாலும், மல்லிகை முல்லையைப் பெயர் சொல்லி அழைப்பதைவிட ‘அக்கா’ என்ற உறவு முறையில் அழைப்பதைப் பழக்கிக்கொண்டாள். மனது உறவுடன் ஒட்டுவதற்கு இதுவும் ஒரு நல்ல பழக்கம்தான். அன்னியர்களைப் பெயர் சொல்லி அழைப்பது ஒரு முறையாக இருந்தாலும், உறவினர்களைக் கூடப் பெயர் சொல்லி அழைக்கும் மேலைநாட்டு முறையில் உறவு, பாசம் என்ற இடமில்லாமல் போவதற்குரிய பல காரணங்களில் இதுவும் ஒன்று ஆகிறது. எல்லோரும் ஒரு குடும்பம், ஓரினம் என்று நினைக்கின்ற இடங்களில், இனங்களில்

பார்ப்பவர்களைக்கூட உறவுமுறை சொல்லி அழைத்துக்கொள்வதன் மூலமாகப் புதியதாக உறவினை ஏற்படுத்தி, பந்தத்தை, பாசத்தை வளர்த்துக்கொள்வது உண்டு. சில குடும்பங்களில் இன்றும் சிறு வயதிலேயே குழந்தைகளை இப்பழக்கத்தின் கீழ் கொண்டு வருவதுண்டு.

தங்கை காரோட்டிச் செல்வதை ரசித்துப் பார்த்துக்கொண்டு இருந்த முல்லை,

''நீ நன்றாகவே கார் ஓட்டுகிறாய். நான் தினமும் காரை ஓட்டினாலும், டிராபிக்கில் காரை ஓட்டும்பொழுது சிறிது பதட்டமாகத்தான் இருக்கும். அன்னையை அழைத்துக்கொண்டே ஓட்டினாலும், சில சமயங்களில் கவனத்தில் அன்னை நகர்ந்து விடுவதுமுண்டு. ஆனால் நீ எப்பொழுதாவது ஒரு முறை ஓட்டினாலும் என்ன அழகாக ஓட்டுகின்றாய்! எல்லாவிதத்திலும் உயர்ந்தவள்தான்'' என்று முல்லை கூறக் கேட்ட மல்லிகை,

''அக்கா, செய்யும் வேலையில் முழுக்கவனம் இருந்தால் எந்தவொரு வேலையையும் நன்றாகச் செய்யலாம்''.

விரைவாகச் சென்றுகொண்டிருக்கும் வாகன வரிசையில் முந்தாமல், ஹாரனைப் பிடித்து அழுத்தாமல், இடம் விட்டு, ஆனால் அதே சமயத்தில் ஒரே சீரான வேகத்தில் வண்டியை மல்லிகை ஓட்டிக் கொண்டிருந்தாள். இரவின் விளக்கொளியில் வரிசையாக வாகனங்கள் சென்றுகொண்டிருப்பதைப் பார்த்து சந்தோஷத்துடன் முல்லை, இரு புறமும் வானத்தைத் தொட்டுவிட முயற்சி செய்யும் உயர்ந்த கட்டிடங்களின் வரிசைகளையும் கண்டவள், ''எத்தனை முறை இந்தப் பக்கம் சென்றாலும் ஒவ்வொரு முறையும் புதியதாகப் பார்ப்பதைப் போன்று, புதிது புதிதாய்க் கட்டிடங்கள் தோன்றி, பழையதைக் கொண்டு பார்க்க இடமில்லாமல் புதியதாய்த் தேட வேண்டிய இடமாக இந்த ரோடிருக்கிறது, இல்லையா மல்லிகை'' என்று தன் தங்கையைக் கேட்டவள், தாங்கள் செல்ல விரும்பிய ஹோட்டல் வந்ததைப் பார்த்தாள்.

இருவருக்கும் பிடித்த vegetable sizzlerஐ ஆர்டர் செய்த மல்லிகை, முல்லையின் முகத்தைப் பார்த்தாள். 'நீ சொல்லப் போவதை நான் கேட்கத் தயாராக இருக்கிறேன்' என்ற முகபாவனை இருந்தது.



புரிந்துகொண்ட முல்லையும், தன் கைப் பையிலிருந்த ஒரு கவரை எடுத்து,

''எப்படியிருக்கிறது என்று பார்த்துச் சொல்''.

''என்னக்கா, திடீரென்று ஒரு போட்டோவைக் கொடுத்து, 'எப்படி இருக்கிறது?' என்று கேட்கிறாய். பார்ப்பதற்குக் கம்பீரமாக இருக்கிறார். முகம் களையாக இருக்கிறது. டை முடிச்சு சரியாக விழவில்லை. காலரின் மடிப்பு மடங்கியிருக்கிறது. பேனா சற்று மலிவான விலையில் உள்ளது போல் தெரிகிறது. சர்ட் 'ஆரோ'வினுடையது. பல் சற்று முனைப்பாக இருக்கிறது. இருந்தாலும், அதுவும் அழகாக இருக்கின்றது. பாஸ்போர்ட் சைஸ் போட்டோவில் உயரம் தெரியாது. என்றாலும், முகத்தின் அளவை வைத்துப் பார்த்தால் 5.5க்கு மேல் இருப்பார் எனத் தோன்றுகிறது. எப்படியும் MBA/BE இருக்குமென நினைக்கிறேன். டென்ஷன் பார்ட்டி என்றும் தெரிகிறது. சற்று முன்கோபி. இதைத் தவிர எதற்காக இந்தப் போட்டோவை என்னிடம் கொடுத்திருக்கிறாய் என்று தெரியவில்லை. என்னிடம் சிபாரிசுக்காக நிச்சயம் கொடுத்திருக்கமாட்டாய். எனக்குத் தெரிந்தவர்களிடம் சொல்லி ஏதாவது வேலைக்குச் சொல்ல வேண்டுமா? அப்படித் தெரிந்தவர்கள் என்று யாரும் எனக்கு அதிகமாகக் கிடையாது என்று உனக்கே தெரியும். நமக்குத் தெரிந்த உறவினரா?''

''முல்லை, உனக்கு என்ன வயது?''

''திடீரென்று வயதைப் பற்றி கேட்கிறாய்? நான் போட்டோவைப் பற்றிக் கேட்டால், சம்பந்தமில்லாமல் வயதைப் பற்றிப் பேசுகிறாய்''.

''இரண்டிற்கும் சம்பந்தமிருக்கிறது'' என்ற முல்லை, ''நீ சொன்னதிலிருந்து போட்டோவை நன்றாக ஆராய்ச்சி செய்து இருக்கிறாய் என்று தெரிகிறது. நீ சொன்னது போல் I.T.யில்தான் டில்லியில் வேலை செய்துகொண்டிருக்கிறார். உனக்குக்கூடத் தெரியும், வசுதா. அவள் தம்பி. உனக்குப் பிடித்திருந்தால், மற்றதைப் பற்றிப் பேசலாம்''.

''எனக்கு எதற்காகப் பிடிக்க வேண்டும்? எதற்காக இக்கேள்வியை என்னிடம் கேட்கிறாய் என்று புரியவில்லை. விஷயத்திற்கு நேரடியாக வா, சுற்றி வளைத்துப் பேசாதே''.

‘‘மல்லிகை...’’ என்று ஆரம்பித்த முல்லை, சூடாக sizzler வந்தவுடன், ‘‘சரி, சாப்பிடுவோம். சாப்பிடும் பொழுது பேசக்கூடாது’’ என்று கூறிவிட்டு, இருவரும் தங்கள் கவனத்தைச் சாப்பிடுவதில் செலுத்தினார்கள்.

மல்லிகையின் மனது முழுவதும் உணவில் மட்டுமே இருந்தது. ரசித்து ருசித்துச் சாப்பிட்டுக்கொண்டிருந்தாள். உணவும் மிக நன்றாக இருந்தது. உருளைக்கிழங்கை நன்கு மசித்து வைக்கப்பட்டிருந்ததி-லிருந்து கொஞ்சம் எடுத்து மிகச் சூடாக இருந்த காய்கறிகளுடன் இணைத்து, மிக மெதுவாக நழுவவிட்டிருந்த சங்கீதத்துடன் சேர்த்து ரசித்தாள். ஆனால் முல்லையோ வாயும், கையும் தன் வேலையைச் செய்து கொண்டிருந்தாலும், மனதோ ‘எப்படி விஷயத்தை மல்லிகையிடம் சொல்வது? ஏதோ ஒரு தைரியத்தில் போட்டோவைக் காட்டிவிட்டாலும், மல்லிகை என்ன சொல்வாள் என்பதை அறிந்திருந்தாலும், இது என் கடமையல்லவா’ என்று ஒரு மனது எங்கிருந்தோ சிறியதாகக் குரலை எழுப்ப, மல்லிகையின் மனதைப் பற்றி தெரிந்தபொழுதிலும், ‘இதைப் பற்றி எப்படிப் பேசலாம்?’ என்று இன்னொரு குரல் ஒலிக்க, அதை அடக்கத் தெரியாமல், ‘அவளுக்கு நல்லதுதானே செய்கிறேன்’ என்று இன்னொரு குரல் சொல்ல முயன்றது. மனது கேட்கும், சொல்லும் கேள்விகளுக்கு இடையே முல்லை போராடிக்கொண்டு இருந்தாலும், அது தன் முகத்தில் எந்தவொரு பிரதிபலிப்பையும் காட்டக்கூடாது என்பதிலும் கவனமாக இருந்தாள். Vegetable sizzler அவளுக்கு மிகவும் பிடித்த ஒன்றானாலும், இன்றைக்கு அதை அனுபவிக்கக்கூடிய நிலையில் இல்லை.

அடுத்த உணவு வருவதற்குரிய இடைவேளையில் முல்லை பேச ஆரம்பிக்கலாம் என்று நினைத்துக்கொண்டிருக்கும்பொழுது சவுராசியாவின் ‘Desh’ இசைக்க ஆரம்பித்தது. ப்ளூட்டின் ஒலியில் தன்னை மறக்க ஆரம்பித்தாள். நினைவு தன்னை மறந்து இசையுடன் ஒன்ற ஆரம்பித்தது.

கடைசியாகக் காபியை இருவரும் ருசித்துக் குடித்து முடித்தார்கள். சாதாரணமாக முல்லை இதற்குள் எல்லா விஷயங்களையும் முடித்திருப்பாள். முடிவு காபி குடிப்பதற்கு முன்பேயே



தெரிந்திருக்கும். ஆனால், இன்றோ முழுச் சாப்பாடும் முடிந்துவிட்டது. ஆனால் விஷயத்தை ஆரம்பிக்கக்கூட இல்லை.

வாழ்க்கை தனக்கு ஆதரவாக இருப்பதைவிட மல்லிகைக்குத் தான் அதிகமாக ஆதரவாக இருக்கிறது என்பதை உணர்ந்துகொண்டாள். என்றாலும் பேச வேண்டியதைப் பேசிவிட வேண்டும் என்பதற்காக, மீண்டும் போட்டோவைக் கையிலெடுத்தாள்.

‘‘மல்லிகை, இந்தப் போட்டோவிலுள்ளவரை உனக்குத் திருமணம் செய்யலாம் என நினைக்கிறேன்’’. முல்லையின் வழக்கமான பாணி அல்ல இது. எந்தவொரு விஷயமாக இருந்தாலும் கடைசியில்தான் கோடி காட்டுவதைப் போல் பேசுவாள். முழுதாக விஷயத்தை உடைத்து, நேரடியாகப் பேசமாட்டாள். எதிராளியின் முக உணர்ச்சிகளுக்கு ஏற்றாற்போல்தான் பேசுவாள். சில சமயங்களில் பிடிக்கவில்லை என்பது போல் தெரிந்தால், விஷயத்தை ஆரம்பித்தாலும் முழுவதுமாகச் சொல்லாமல் வேறு ஒன்றுடன் பேசிச் சமாளித்து, மனம் உடையாமல் பார்த்துகொள்வாள். ஆனால் இன்று எதுவுமில்லாமல் சட்டென்று விஷயத்தை உடைத்தாள்.

ஒரு நிமிடம் பதிலேதும் சொல்லத் தெரியாமல் மல்லிகை உறைந்தாலும்,

‘‘அக்கா, எனக்கு அப்பாவும், அம்மாவுமாக இருப்பவள் நீதான். அப்பாவையும், அம்மாவையும் உன்னிடம் பார்த்துகொண்டிருக்கிறேன். என் மனம் என்னவென்று உனக்கு நன்றாகத் தெரியும். அந்தச் சமயங்களில் எனக்குச் சகோதரியாய், தோழியாய் இருந்திருக்கிறாய். என்னைவிட அதிர்ஷ்டசாலி கிடையாது என்று ரோஜாக்காவிடம் பல முறை சொல்லியிருக்கிறேன். இன்றைக்கு இந்த விஷயத்தை என்னிடம் நீ சொல்கின்றாய் என்றால், அன்னை மட்டுமே வேண்டும் என்பதில் நான் உண்மையாக இல்லை என்பது எனக்கு நன்றாகத் தெளிவாகிறது. என்னிடம் sincerity இல்லை. அதனால்தான் வாழ்க்கை உன் மூலமாக இதை என் முன்னே கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது. என்னுடைய ஜீவன் அன்னையுடன் ஏதோ ஒரு சூட்சும சக்தியால் பிணைக்கப்பட்டிருப்பதாக நம்பியிருந்தேன். என்னுடைய போக்குக்கு அன்னையை நான் ஏற்றுக்கொண்டு இருக்கிறேனே ஒழிய அன்னையின் போக்குக்கு மாறவில்லை என்பது

எனக்குத் தெரிகிறது. நம்முடைய வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் நமக்கு நடக்கக்கூடியவற்றின் மீதான கட்டுப்பாட்டை இழந்துவிடுகிறோம். நம்முடைய வாழ்க்கை விதியின் கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பதெல்லாம் பொய் என்று நினைத்தேன். அன்னை ஒன்றுதான் மெய் என்று பரிபூர்ணமாக நம்பினேன். ஆனால் ஏதோவொரு இடத்தில் என் மனது என் கட்டுப்பாட்டையும் மீறிச் சென்றிருக்கிறது என்பது நீ இப்பொழுது பேசியதிலிருந்து நன்றாகப் புரிகிறது'' என்ற மல்லிகை, இன்னுமொரு காபிக்கு ஆர்டர் செய்தாள்.

காபியைக் கலக்கிக்கொண்டே,

''அக்கா, உங்களுக்கு நன்றாக நினைவிருக்கும், அம்மா காலையில் ஆண்டாளின் திருப்பாவையுடன் வாரணமாயிரத்தையும் சேர்த்தே பாடுவார்கள். அதில் ஓரிடத்தில் 'மானிடவர்க்கென்று வாக்குப்படின் வாழகில்லேன் கண்டாய்......' என்று வரும். அவ்வரி என் மனதில் சற்று ஆழமாகப் படிந்துவிட்டது. உனக்கே தெரியும், எனக்குப் புத்தகம் படிப்பது மிகவும் பிடிக்கும். இராமகிருஷ்ணரின் சுயசரிதையில் சாரதா தேவி, இராமகிருஷ்ணரின் மனைவியாக இல்லாமல், தேவியாக இருந்தார் என்று படித்தேன். ஆண்டாள் ஸ்ரீ ரங்கநாதரை மணந்துகொண்டாள். இதையெல்லாம் யோசித்துப் பார்க்காமலேயே என் மனது மானிடரைத் திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்று 16 வயதிலேயே தீர்மானம் செய்தது. சிறுபிள்ளைத்தனமானது என்று நினைக்கலாம். சிலவற்றைக் காரண, காரியங்களுடன் வைத்துப் பார்த்தால், தர்க்கரீதியாக வேண்டு-மானால் நடக்கலாம். ஆனால் உண்மையில் எப்படி நடக்கும்? மீரா, கிருஷ்ணனை மனதால், உணர்வில் ஏற்றுக்கொண்டாலும், உடலால் மேவாரின் மனைவியாகத்தானே வாழ்ந்தாள் என்று பதில் சொல்லும். ஆனாலும் தன் விருப்பத்தில் உண்மை இருந்தால், நடக்கும் என்பதனை அன்னையிடம் வந்தபிறகு புரிந்துகொண்டேன். என் தன்மைக்கு, personalityக்கு திருமணம் என்ற பந்தம் தேவையில்லை. காற்றுக்கு அணை போட முடியாது. உயர்ந்த இலட்சியம் என்று சொல்லவில்லை. ஆனால் ஏனோ என்னால் சாதாரணமாக எல்லோரையும் போல் வாழ முடியும் என்று தோன்றவில்லை; பிடிக்கவும் இல்லை. என்னுடைய இயல்புக்கு ஒத்து வரும் என்று தோன்றவும் இல்லை. சார்ந்திருந்து வாழ்வது என்றால் அது, தெய்வத்தைச் சார்ந்து வாழ வேண்டும் என்று விரும்புகிறேன். அன்னை, 'குழந்தை, வீடு, ஆணைச் சார்ந்து வாழும் தன்மை ஆகியவற்றிலிருந்து பெண்கள் சுதந்திரம் பெற வேண்டும்' என்று சொல்லியிருக்கிறார் என்பதை அறிந்ததிலிருந்து இன்னும் அதிகமாக எனக்குள், 'திருமணம் என்ற பந்தத்திற்குள் இணையக்கூடாது' என்று வேரூன்றிவிட்டது. பாதுகாப்புத் தருபவையென்று பெண் நம்பிக்கொண்டிருக்கும் இம்மூன்றைவிட அன்னை தரும் பாதுகாப்பை, அவர் அருளால் எழும் பாதுகாப்பை முழுமையாக நம்பி வாழ வேண்டும் என்று விரும்புகிறேன். என்னுடைய விருப்பத்தை நான் உன்னிடம் சொல்லாவிட்டாலும், எனக்கு எது தேவையென்பதை நான் சொல்லி, கேட்டு என்றுமே நிறைவேற்ற வேண்டிய சந்தர்ப்பத்தை நீ இதுவரையில் கொடுத்ததில்லை. நான் நினைப்பதற்கு முன்பாகவே என் மனமறிந்து பூர்த்தி செய்திருக்கிறாய். என் மனதில் அன்னைதான், அன்னை மட்டுமே நிறைந்திருக்கிறார் என்று நினைத்துகொண்டிருந்ததில் கள்ளம் உள்ளது என்பதை இன்று நீ புரிய வைத்திருக்கிறாய். அதற்காக உனக்கு நன்றி சொல்ல வேண்டும். உனக்குத் திருமணம் அவசியம்; என்னைப் போல் நீ இல்லை. அதற்காக என்னை உயர்வென்றோ, நீ அப்படியில்லை என்றோ சொல்லவில்லை. ஒவ்வொருவர் இயல்புக்கேற்ற வாழ்க்கை வாழ்வதுதான் நல்லது. உன் இயல்புக்கு நீ தென்னரசைத் திருமணம் செய்து, சந்தோஷமாக வாழ வேண்டும். அப்பாவும், அம்மாவும் இல்லை என்று நீ ஏன் நினைக்கிறாய்? பகவானும், அன்னையும் இருக்கிறார்கள். அவர்களை ஏற்றுக்கொண்டபிறகு, இல்லை இல்லை அவர்கள் நம்மை ஏற்றுக்கொண்டபிறகு நாம் புதிய பிறவிகள் ஆகின்றோம். நம்முடைய தாயும், தந்தையுமாக அவர்களே இருக்கிறார்கள்''.

''மல்லிகை, நீ சொல்வது, உன் மனது எனக்குத் தெரியும் இருந்தாலும்...'' என்று இழுத்த முல்லை,

''கடைசியில் நீ சொன்ன விஷயம் தவிர மற்றது எனக்குச் சம்மதமே. உன் சுதந்திரத்தில் நான் தலையிடவில்லை. உன் விருப்பத்திற்கு மாறாக இதுவரையில் நடந்ததில்லை. இனியும் செய்ய மாட்டேன். வா, போகலாம்''.

✡✡✡

''அக்கா, தென்னரசு விஷயத்தில் ஏதோவொன்று எனக்குத் தெரியவில்லை. உனக்கது தெரியும்; தென்னரசுக்கும் தெரியுமென நினைக்கிறேன். நீங்கள் இருவரும் காலேஜிலிருந்து ஒன்றாகப் பழகியவர்கள். அப்பா, அம்மா விபத்திற்கு முன்பே உங்கள் இருவருக்கும் திருமணம் செய்ய வேண்டும் என்ற வரையில் எனக்குத் தெரியும். விபத்தில் நடந்த விஷயங்கள் வேறு எதைப் பற்றியும் சிந்திக்க விடவில்லை. இப்பொழுது நினைத்தாலும்....'' என்ற மல்லிகைக்கு,

''மல்லிகை, அதைப் பற்றிப் பேசாதே. அன்னையிடம் ஆயிரம் முறைக்கு மேல் சொல்லி, அதன் கசப்பை, துக்கத்தை மாற்ற முயற்சி செய்திருக்கிறேன். இன்றைக்கு நான் உன்னிடம் பேசியது என்னுடைய தவறுதான். அதற்காக வேண்டுமானால் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். இனி இதைப் பற்றி நாம் இருவருமே மறந்துவிடலாம். தூங்கு, எதைப் பற்றியும் நினைக்காதே'' என்று பேச்சிற்கு முற்றுப்புள்ளி முல்லை வைத்தாள்.

✡✡✡

''ரோஜாக்கா, இன்றைய தியானத்திற்கு ஒரு புதிய அன்னை அன்பரை அழைத்து வந்திருக்கிறேன். பெயர் தென்னரசு'' என்று மல்லிகை அறிமுகப்படுத்தி வைத்தாள்.

நல்ல உயரம், முகம் தெளிவாக இருந்தது. முழுக் கை சட்டையை 'இன்' செய்திருந்தது உடையின் நேர்த்தியை மட்டும் அல்லாமல், தென்னரசு செய்யும் காரியங்களைக் கவனத்துடன், கலைநயத்துடன் செய்வான் என்பதையும் காட்டியது. குழப்பமில்லாமல், அழகாக, நிதானமாக இருப்பவன் என்பதைத் தலையைச் சீர் செய்திருந்த தன்மையும், நடந்து வரும் நடையும் தெளிவாக உணர்த்தின. எல்லோரையும் ஈர்க்கும் முகமல்ல என்றாலும், பழகுவதற்கு இனிய, நினைவில் இருத்திக் கொள்ளக்கூடிய முகம். தின்பதற்கு மட்டுமல்லாமல், தின்னப்படுவதற்கு உரிய ஒழுங்காக அமைந்த பற்களின் அழகு முகத்தின் புன்னகைக்கு மெருகூட்டுவதாக இருந்தது.

தென்னரசு முதலில் அங்கிருந்த அன்னை, பகவானுக்கு முன் தன் கையுடன் கொண்டு வந்திருந்த **உணர்வில் வலிமை, உடலின்**



**ஏற்புத் திறன், பல்வகைச் சிறப்பு, தவறில்லாத அமைப்பு, தவறான யோசனையை மறுத்தல், கீழ்ப்படிதல், உடலில் அணுவின் தூய்மை, தர்க்கரீதியான எண்ணம், தூய்மை** ஆகிய மலர்களை அங்கிருந்த தட்டில் வைத்து, உடல் நிலத்தில் முழுவதுமாகப் படிய வணங்கினான். பின், ரோஜாவைப் பார்த்து, ''வணக்கம், உங்களைப் பற்றி மல்லிகை கூறி இருக்கிறார்கள். மிகைப்படுத்திக் கூறுகிறார்களோ என்று நினைத்தேன். உள்ளதை உள்ளபடி சொல்லியிருக்கிறார்கள் என்பது இப்பொழுது எனக்குப் புரிகிறது. உங்களைப் பார்த்ததில் எனக்கு மிக மிகச் சந்தோஷம். இதை வெறும் வார்த்தையாகச் சொல்லவில்லை. நல்ல மனிதர்களைப் பார்ப்பது அபூர்வம். அதிலும் என்னுடைய கசப்பான அனுபவங்கள் நல்லவர்களுடன் அதிகமாகப் பழகச் சந்தர்ப்பங்கள் கொடுத்ததில்லை. வாழ்க்கையின் வசந்தத்தில், என்னால், நான் செய்த தவற்றால் சந்தோஷத்தை இழந்தேன். மல்லிகையுடன் பேச ஆரம்பித்த பிறகு, அவள் அன்னையைப் பற்றி சொல்லிய பிறகு, எனக்கும் நம்பிக்கை வந்தது. உங்களைப் பார்த்தவுடன் ஏதோ பல வருடங்கள் பழகியது போன்று எனக்குத் தோன்றுகிறது. மனம் விட்டுப் பேச நினைக்கிறேன். ஆனால் பழக்கம் தடுக்கிறது''.

''அதற்கென்ன தென்னரசு, என்னிடம் ஏன் சொல்ல வேண்டும். இங்கிருக்கிறார்கள் பார், அவர்களிடம் சொல். எங்கு சொன்னால் நல்லது நடக்குமோ, அங்குதான் மல்லிகை உன்னை அழைத்து வந்து இருக்கிறாள். அன்னையை நீ ஏற்றுக்கொள்வதற்கு முன் அவர்கள் உன்னை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். நீ இன்று இங்கு வரப்போவது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆனால், எனக்கு இன்றைக்குச் '**சந்தோஷம்**' மலர் மிக அதிகமாகக் கிடைத்திருக்கிறது. இதற்குரியவர் ஒருவரை அன்னை அழைத்து வருவார் என்பது மட்டும் எனக்கு நிச்சயமாகத் தெரியும். நீதான் இன்றைக்கு அன்னையால் அழைத்து வரப்பட்டவர் என்பதில் எனக்கு மிக்க சந்தோஷம்'' என்று கூறிய ரோஜா, அவன் கையில் 'சந்தோஷத்தைக்' கொடுக்க, தியானத்திற்கு உட்கார்ந்தார்கள்.

*தொடரும்...*

❀❀❀

## Evolutionary theory unproved.
## டார்வின் கொள்கையை நிரூபிக்கவில்லை.

✡ உலகப் பிரசித்தி பெற்ற சரித்திர ஆசிரியர் A.J. டாயின்பீ, 'டார்வின் கொள்கையை நிரூபிக்கவில்லை' என்கிறார். பகவான் ஸ்ரீ அரவிந்தரும் அதையே கூறுகிறார்.

✡ டார்வின் கொள்கையைப் பகவான் ஏற்கிறார். 'ஒரு speciesலிருந்து அடுத்த speciesக்கு வரும்பொழுது ஜீவியம் தலைகீழ் மாறுகிறது. அதை டார்வின் கொள்கை கூறவில்லை; கூற முடியாது. ஏனெனில், அது சூட்சும உலகைச் சேர்ந்தது' என்கிறார்.

பேரம் பேசும்பொழுது அடுத்தவர் சொல்வது சொல், நினைப்பது சூட்சும உணர்வு. முடிவு சூட்சுமத்திலுள்ளது. அதைக் கூற விஞ்ஞானியால் முடியாது.

✡ 'ஏன் முடியாது?' என்ற கேள்வியை எழுப்பலாம்.

கிருஷ்ண பரமாத்மா தெய்வம். அவர் கூறுவதை துரியோதனன் ஏற்றிருந்தால் அங்கு வியப்பில்லை. அவன் ஏற்கவில்லை. அது வியப்புக்கு உரியது. அத்துடன் பரமாத்மா போர்க்களம் சென்றிருக்க வேண்டாம்; சென்றார்; வென்றார்.

**வென்றாலும், தர்மத்தை நிலைநாட்ட அதர்மத்தைக் கையாண்டு வென்றார். அது அவசியம்.**

பரமாத்மா தெய்வீக மனத்தைச் சார்ந்த தெய்வம். அதுவும் மனம்



என்பதால், அதற்கு இரு புறங்கள் உள. அதனால் தர்மம் அதர்மத்துடன் இருக்கும்.

**தெய்வீக மனம் வரை பகலுடன், இரவு வரும்.**
**இரவில்லாத பகல் தெய்வீக மனத்தில் இல்லை.**
**அது சத்தியஜீவியத்தில் உள்ளது.**
**அங்கு தோல்வியற்ற வெற்றியுண்டு.**

டார்வின் மனத்திலிருந்து செயல்படுவதால், இங்கு சூட்சுமம் எழுந்து கொள்கையைப் பூரணப்படுத்தாது. அது சத்தியஜீவியத்திற்கேயுண்டு.

**சத்தியஜீவியம் அன்னை ஜீவியம்.**
**அங்கு இரவில்லாத பகலுண்டு.**
**தோல்வியற்ற வெற்றியுண்டு.**

டார்வின் கொள்கையைச் சத்தியஜீவியத்திலிருந்து விளக்கினால், சூட்சுமமும் கலந்து இன்று விடுபட்டதைப் பூர்த்தி செய்யும்.

**டார்வின் உலகுக்குத் தராத ஜீவியத்தை அன்னை, பக்தர்கட்குப் பிரார்த்தனை மூலம் தருகிறார்.**

**பக்தர் ஒருவர் டார்வின் கொள்கையைச் சத்தியஜீவியத்-திலிருந்து விளக்கினால், கொள்கை பூர்த்தியாகும்.**

**பகவான் அதை The Life Divineஇல் செய்துள்ளார். "டார்வின் சொல்வது ரூபத்திற்குரிய பரிணாமம். பரிணாமம் ஜீவியத்திற்குரியது" என விளக்கம் தருகிறார்.**

❀❀❀

# யோகசக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**87. வலிய உதவப் போவதைத் தள்ளிப்போடு.**

பொதுவாகப் பெரும்பாலோர்க்கு அது பிரச்சினையில்லை.

சுயநலமிக்கு இது பிரச்சினையாகாது.

பெருந்தன்மையானவர்க்கும், வீண்பெருமை தேடுபவர்க்கும் இது தவிர்க்க முடியாத பிரச்சினை.

சுயநலமி எப்படிச் சுயநலத்தைக் கருதாமலிருக்க முடியாதோ அதேபோல் பெருந்தன்மை வேறு வகையாகச் செயல்படாது.

உதவுவது வேறு, வலியப் போய் உதவுவது வேறு.

பெருந்தன்மையாக உதவினாலும் தவறாது உதவி பெறுபவரால் தொந்தரவு வரும். உதவி செய்பவர் அதிகாரத்திலிருந்தால், இருக்கும் வரை தொந்தரவு வாராது.

தொந்தரவு என எழுந்தால் இப்படிப்பட்டவர்க்கு யார் அதற்கு மூலம் எனப் பார்த்தால் ஒரு காலத்தில் இவரிடம் உதவி பெற்றவராக நிச்சயமாக இருப்பார்.

வீண்பெருமை அடிபடுவது நியாயம் எனத் தோன்றும்.

இருந்தாலும் சட்டம் இருவருக்கும் ஒன்றே.

இவர்கட்குத் தம்மால் உதவ முடியும் என்ற நிலை எழுந்தால் 1 நிமிஷம் தாமதிக்க முடியாது. தள்ளிப்போடுவது இவர்களிடமில்லை.

தள்ளிப்போடுவது சுபாவத்தை மாற்றுவதாகும்.

அதனால் தள்ளிப்போடுவது பலன் தரும்.

தள்ளிப்போட இவர்கள் முயன்றால், தவிர்க்க முயன்றால், இவர்கள் தவிப்பதைப் பார்க்க முடியாது.

தொந்தரவு தருவதைத் தவிர்ப்பது அவசியம்.

தவிர்க்க முயன்று வென்றால் வெல்வது சுபாவத்தை.



சுபாவத்தை வெல்பவர்க்கு அன்னை அருள் அபரிமிதமாக உண்டு.

இப்படிப்பட்ட சுபாவம் உள்ளவர்க்கு இது அரிய, பெரிய பயிற்சி.

உதவினால் வருவது உபத்திரவம்.

வலியப் போய் உதவினால் ஆதாயத்திற்காகச் செய்வதாக நினைத்து ஏற்க மறுப்பார்கள்.

பெற மறுக்கும் கிராக்கி பெரிய கிராக்கி.

எதை அப்படிப் பிறருக்குக் கொடுக்கிறோமோ அது நம்மை விட்டுப் போகும்.

பொருள், பணம், வேலை, உதவி, நன்றி போன்றவை பர்சனாலிட்டி உடையவை.

'என்னைத் தகுதியற்றவனிடம் கொடுப்பது தவறு' என அவை கூறும் வகையில் நம்மைவிட்டு அகலும்.

வாழ்நாள் முழுவதும் அது மீண்டும் வாராது.

பொருத்தமான காரியத்தை, அளவோடு, தகுதியுள்ளவர் வேண்டும் பொழுது தரவேண்டும்.

இது விலக்கில்லாத சட்டம்.

**88. பிறர் விஷயத்தை அறியும் ஆவலைக் (curiosity) கைவிடு - 1 மாதம்.**

Unhealthy curiosity என்பது ஆங்கிலச் சொல். Prying Paul எனவும் கூறுவர். இப்படிப்பட்டவர் ஒருவரிருந்தால் ஊர் நாசமாகிவிடும்.

இது என்ன குணம்? எப்படி ஏற்பட்டது?

எவரும் தம்மைச் சேர்க்கவில்லை எனில் எல்லோருடனும் சேர்ந்து கொள்ள மனிதன் நாடும் உபாயம் இது.

ஒருவரைப் பற்றிய முக்கிய விஷயங்களைத் தெரிந்துகொண்டால், அவர் நம் பிடிக்குள் வருவார் என்பது நம்பிக்கை. அதனால் இவர்கள் எல்லாச் செய்திகளையும் சேகரம் செய்வார்கள்.

முக்கியமான செய்தி கையிலிருந்தால் விஷமம் செய்யத் தோன்றும். இது போன்றவரை நிண்டுணி என்று கூறுவார்கள். ஊரார் சேர்ந்து அவரை அடித்துக் கொல்வார்கள்.

கொலை செய்யும் கட்டத்தை ஊர் கடந்துவந்தால், இவர்களுக்கு இடம் கிடைக்கும். இப்படிப்பட்டவர் விஷயம் சேகரம் செய்வதில் மனிதன் இதுவரை கற்ற அதிகபட்சத் திறமையிருக்கும். இதுவே தகுதியற்ற மனிதன் மனிதனாக முயலும் பாதை. இதன் சுவடு அனைவரிடமும் இருக்கும். நம்மிடம் தவறாமல் இருக்கும்.

**இது அறவே விலக வேண்டும்.**

இது விலகுவதற்கு அடையாளம் இதைப் பிறரிடம் காணும்பொழுது நமக்கு எரிச்சல் வரக்கூடாது. எரிச்சல் வந்தால் நம்மிடம் உள்ளது நம்மை உள்ளே சீண்டுகிறதுஎனப் பொருள்.

எரிச்சல் வாராவிட்டால் ஏன் இந்த குறிப்பிட்ட நபர் இப்படியிருக்கிறார் என யோசிக்க வேண்டும்.

அவருடைய வளர்ப்பு, வாழ்வு எப்படி அவரை இதுபோலாக்கிற்றுஎனப் புரியும்.

அவருடைய கெட்ட பழக்கம் அவரைப்பொருத்தவரை பழக்கமே தவிர கெட்டதில்லை.

நமக்குக் கெட்டதாகத் தெரிவது அவருக்குக் கெட்டதில்லை.

அவரவருக்கு அவரவர் பழக்கம் சரி; கெட்டதில்லை.

ஆனால் நமக்கு நல்லது, கெட்டது உண்டு.

நாம் பிறரைப்போலில்லாமல் கெட்டதிலிருந்து நல்லவராகி, மீண்டும் அதிலிருந்து விலகி மனிதனாக வேண்டும்.

இந்தக் கோணத்தில் நமது கடந்த வாழ்வைக் கருதவேண்டும்.

இப்பழக்கமுள்ளவர் 1 மாதம் இதைக் கைவிடுவது பலன் தரும்.

அவர் புத்துயிர் பெற்று, புது மனிதனாவார்.

பிறர் விஷயத்தை அறியும் ஆவல் நம் விஷயத்தை அறியும் ஆவலாக மாறும்.

நம் விஷயத்தை அறிவது Self-awareness.

உடலையும், உணர்வையும் அறிந்து மனத்தை அறிய வேண்டும்.

முடிவாக ஆத்மாவை அறிய வேண்டும்.



அதைக் கடந்து ஆத்மா வாழ்வில் வெளிப்படுதல் தெரியும்.

அது புதுவாழ்வு தரும்.

## 89. பிறருக்கு நல்லது செய்வது ஆனந்தம் தரவேண்டும்.

நல்லது வேறு, பிறருக்கு நல்லது செய்வது வேறு. அதுவும், தெரியாத பிறருக்கு நல்லது என்பது முற்றிலும் வேறு.

பிறருக்கு நல்லது செய்ய நினைத்தால் சாதாரணமாக எழுவது எரிச்சல், கோபம்.

பிறருக்கு நல்லது செய்து, அதன்மூலமாக நமக்குப் பெரிய நல்லது வருகிறதுஎன்றால் பலர் விரும்பிச் செய்வர். சிலருக்கு அதுவும் பிடிக்காது. மற்றவர் ''வருவது இப்படித்தான் வரவேண்டுமா?'' என்று அங்கலாய்ப்பார்கள். ''அப்படித்தான் வரவேண்டும்என்றால் அது வேண்டாம்'' என்பவரும் உண்டு.

இயல்பாகப் பிறருக்கு நல்லது செய்யத் தோன்ற வேண்டும்.

அதைச் செய்வது மனம் திருப்திப்படுவதாக இருக்க வேண்டும்.

அந்த நிலையில் மனம் இல்லாவிட்டால், அதை அந்த நிலைக்குக் கொண்டுவர வேண்டும்.

பிறருக்குச் செய்வது நமக்குச் செய்வது என்பது மூலம்.

பிறருக்குச் செய்வது நமக்கு அதிகமாகச் செய்துகொள்வது.

நமக்கு நாமே சேவை செய்யச் சிறந்த வழி பிறருக்கு நல்லது செய்வது.

நல்லதுஎனில் பிறருக்குமட்டும் செய்ய வேண்டும்; நமக்கு நாமே நல்லதைச் செய்யக்கூடாது.

நம் திறமையை நாமே பாராட்டக்கூடாது.

அதைப்போல் நமக்கே நாம் நல்லதைச் செய்துகொள்ளக்கூடாது.

பிறர் என்பது நம் பிரதிபலிப்பு.

பிறர் வேறு, நாம் வேறில்லை.

ஆன்மீகம் அடுத்தவரை நாமாகக் கருத உதவும்.

அதுவே சர்வம் பிரம்மம் எனப்படும்.

நாமே பிரம்மம்.

பிறரும் பிரம்மம்.

பிரம்மத்திற்குச் சேவை செய்யப் பிறருக்குச் சேவை செய்யலாம்.

அலிப்பூரில் பகவான் கண்ட நாராயண தரிசனம் அனைத்தும், அனைவரும் பிரம்மம், நாராயணன் என்பதைக் காட்டுகிறது.

அதை மனம் ஏற்றால் பிறருக்கு நல்லது செய்யத் தோன்றும்.

அப்படித் தோன்றுவது சந்தோஷம் தரும்.

சந்தோஷம் ஆனந்தமாக உயரும்.

ஆனந்தம் உணர்வில் வெளிப்படுவது சந்தோஷம்.

நாம் பிறருக்கு நல்லது செய்தால் பிறர் நமக்கு நல்லது செய்வார்கள்.

அது ஆனந்தம் தந்தால் அனைவரும் நமக்கு நல்லது செய்வார்கள்.

பிறர் என்பது நாமே, பிரம்மமே என்பது ஆன்மீகத்திற்கு மட்டும் உரிய ஞானம்.

அதைச் செய்வது ஆன்மீக வாழ்வை ஏற்பது.

தொடரும்....

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

வாழ்நாள் முழுவதும் தேடிய புனிதம் பூர்த்தியடையும்பொழுது அது அமிர்தமான அற்புதமாகி வாயால் பேசினால் அழியும் இனிமையாக மாறுகிறது.

***அமிர்தமான புனிதம் சொல்லாலும் அழியும்.***

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Puducherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Puducherry-11 on behalf of The Mother's Service Society, Puducherry-11.

Editor: N. Asokan

## மரண வாயில்

**மரணமடைந்தபின் மீண்டும் பிழைத்தவர் பலர்.**
**அவர்கள் அடுத்த லோக அனுபவம் அரிதானது.**

**ஜூலியட் நைட்டிங்கேலின் அனுபவத்தில் சில துணுக்குகள்:**

✡ **திடமான பொருள்கள் பிரகாசம் பொருந்திய திரவமாயின.**

✡ **நான் coma கோமா நிலையை அடைந்தேன்.**
**நான் ஒளி பொருந்திய ஜீவனானேன்.**
**தெய்வீக அன்பு என்னைக் கவசமாகச் சூழ்ந்தது.**

✡ **வாழ்வு சினிமா படம்போல் மாறியது.**

✡ **எல்லாப் பொருள்களும் ஒளி வீசின.**

✡ **தேவதைகள் என்னை வழி நடத்தின.**

✡ **உடல் இல்லை என்றாலும் உருவம் இருந்தது.**

✡ **நான் ஓர் நீர்க்குமிழி போல் அசைந்தாடினேன்.**

✡ **பசி, தாகமில்லை.**

✡ **உடலுள் தென்றல் வீசுவது போலிருந்தது.**

✡ **யாரோ என்னைப் பல லோகங்களுக்கும் அழைத்துச் சென்றனர்.**

✡ **நரகத்தின் வாயிலைக் கண்டேன்.**
**அங்கு ஆத்மாக்கள் துன்பத்தில் உழல்வதைக் கண்டேன்.**

❀❀❀

## உள்ளத்திற்கு உண்மையுண்டு
## உண்மைக்குச் சக்தியுண்டு

சர்வதேசக் கமிஷன் முதற்கூட்டம் இத்தாலியில் நடந்தது. அடுத்த கூட்டம் மாஸ்கோவில். அதற்குரிய பணத்தைப் பெற ஜப்பானிய சங்கம் ஒன்றுக்கு விண்ணப்பித்து இருந்தோம். கமிஷன் தலைவர் ஜப்பானில் ஒரு விருது வாங்குவதற்காகப் போகிறார். அதே சமயம் காரியதரிசியும் வந்தால், இருவரும் ஜப்பான் சங்கத்தைச் சந்திக்கலாம் என்று முடிவு செய்தனர். தலைவர் முன்கூட்டி விழாவுக்காகச் சென்றுவிட்டார். குறிப்பிட்ட நாளன்று காரியதரிசி ஜப்பான் சென்று, தலைவரை போனில் கூப்பிட்டார். "நான் வருவதற்கில்லை. நீங்கள் மட்டும் போங்கள்" எனத் தலைவர் கூறினார். காரியதரிசிக்குப் பெரிய ஏமாற்றம். அவர் அன்னை பக்தர். 'ஏன் எனக்கு இந்த அவல நிலை?' என்று அவர் தன்னையே கேட்டுக்கொண்டார். ரஷ்யப் பிரதிநிதிக்கு மொழிபெயர்க்க ஒரு ரஷ்யப் பெண்ணுண்டு. ரஷ்யர்கள் எல்லோரும் பிரியமாகப் பழகுபவர்கள். இப்பெண் அனைவரிடமும் அதிகப் பிரியமாகப் பழகுவார். காரியதரிசி தன் மனத்தைச் சோதனை செய்தபொழுது மாஸ்கோவில் கமிஷன் கூட்டத்தைவிட மாஸ்கோ போனால் அப்பெண்ணைச் சந்திக்கலாம் என்ற எண்ணம் மேலிட்டிருந்தது தெரிந்தது. தன் நிலையைக் கண்டு தானே வெட்கப்பட்டார். ஆனால் அப்பெண் நினைவு விலகவில்லை. ஆழ்ந்து முயன்றார். அது விலக மறுத்தது. என் மனம் கடமையினின்று பிரண்டு ஒரு பெண்ணை நாடும்பொழுது, தலைவர் வர மறுப்பது சரி எனப் பட்டது. அதன்பின் உணர்ச்சி சற்று வழிவிட்டது. தொடர்ந்து அவ்வெண்ணத்தை விலக்க முயன்று, வெற்றி கண்டார்.

அதே வினாடி போன் மணியடித்தது. தலைவர் கூப்பிட்டார். "Ford Foundation போர்ட் குழு $ 35,000 சாங்ஷன் செய்து உள்ளது. நான் உங்களுக்குச் சொல்ல மறந்துவிட்டேன்" என்றார்.

**விஷயம் எதுவானாலும், எவ்வளவு**
**பெரியதானாலும், உள்ளம் உண்மை பேசினால்,**
**அது நடக்கும்.**

❀❀❀

July 2008 Jiviyam 14 Malar 3
Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/06-08
Price: Rs.5/- WPP No.45/06-08

புதிய வெளியீடுகள்

கர்மயோகியின்

| | |
|---|---|
| **பரம்பொருள் III** | ரூ.200/- |
| **எங்கள் குடும்பம்** (பாகம் 2) | ரூ.250/- |
| **உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம்** | ரூ.100/- |
| **யோக வாழ்க்கை விளக்கம் IV** | ரூ.150/- |

சொசைட்டியின் பிற வெளியீடுகள்

**லைப் டிவைன் விரிவுரைகள்** ரூ.100/-
*தமிழாக்கம்:* என். அசோகன்

**SATYA JYOTHI** ரூ.200/-
**(CONCISE TRUISMS)**
**N.Asokan**

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்

கிடைக்குமிடம்

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு, புதுச்சேரி
- 605 011.
✆: (0413) 2212443, 2214231

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
"சுந்தரம்",
24, 1வது குறுக்குத் தெரு,
மேற்கு C.I.T. நகர், சென்னை-600 035.
✆: (044)-24347191